வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 01.08.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 240 | பக்கங்கள் : 16

# சகல அரச ஊழியர்களையும் பணிக்கு அழைக்கக்கூடாது!

## அப்படி செய்தால் போராட்டம் வெடிக்கும் அரச தாதியர் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை



கொழும்பு, ஓகஸ்ட் 01

அரச ஊழியர்கள் சகலரையும் பணிக்கு அழைத்துள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

இது தொடர்பில் வெளியிடப்படவுள்ள சுற்றறிக்கையில் சுகாதார ஊழியர்கள் உள்ளடக்கப்படக்கூடாது. மாறாக அவர்களையும் உள்ளடக்கிய புதிய சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்த முயற்சித்தால் சகல சுகாதார ஊழியர்களையும் ஒன்றிணைத்து பாரிய தொழிற்சங்க நடவடிக்கை ஈடுபட நேரிடும் என்று அரச தாதியர் அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

15

## கொரோனா தொற்றால் மேலும் 61 பேர் மரணம்

கொழும்பு, ஓக. 01

நாட்டில் மேலும் 61 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 441 ஆக அதிகரித்

15

## அமைச்சர் டலஸீம் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஓக. 01

மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, கொழும்பிலுள்ள அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அவரது அமைச்சின் அலுவலக அதிகாரிகள் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டதையடுத்தே அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். தான் நலமுடன் இருப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். (இ)

## 2404 கர்ப்பிணி தாய்மார் தொற்றினால் பாதிப்பு

### 14 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 01

இலங்கையில், கொரோனாத் தொற்று பாதிப்பை ஏற்படுத்தி முதலாவது அலையில் இருந்து இதுவரையான காலப்பகுதியில் 2404 கர்ப்பிணித் தாய்மாருக்கு தொற்று உறுதியாகியுள்ளதாக குடும்ப நல சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதன் பணிப்பாளர் சித்ரமாலி டி சில்வா,

15

## தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்களுக்கு இரண்டு மடங்கு கட்டணம் அறவிட முடிவு

### தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 01

கொரோனாத் தடுப்பூசியின் ஒரு டோஸையேனும் ஏற்றிக்கொள்ளாதவர்களுக்கு சாதாரண பஸ் கட்டணத்தை விட இரண்டு மடங்கு கட்டணம் வசூலிக்கப்படும் என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் அதிகரித்து வரும் டெல்டா வைரஸ் பரவலைக் கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளோம். இது தொடர்

15

## புலிகளின் இலட்சினையுடன் போலி காலணிகள் விற்பனை

### வெளிநாட்டலுவல் அமைச்சு விளக்கம்

கொழும்பு, ஓக. 01

சமூக ஊடகங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அடையாளத்துடன் கூடிய போலியான நைக் காலணிகளின் காணொளி வெளியாகியுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

நைக் சின்னம் மற்றும்

15

## மன்னார் தாழ்வுபாடு கிராமத்தில் 35 தொற்றாளர்கள் அடையாளம்

மன்னார், ஓக. 01

மன்னார் தாழ்வுப்பாடு கிராமத்தில் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 35 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனால் அந்தக் கிராமத்தை தனிமைப்படுத்த கோரிக்கை முன்

15

## ஊர்காவற்றுறை பிரதேச செயலக ஊழியருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஓக. 01

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

15

## சரத் வீரசேகரவின் அமைச்சிலிருந்து இரு துறைகள் ஜனாதிபதியால் நீக்கம்

கொழும்பு, ஓக. 01

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் அமைச்சின் கீழ் காணப்பட்ட இரு துறைகள் நீக்கப்பட்டு, பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி கோட்டாபய

15

## நேற்றும் 2000 ஐத் தாண்டியது தொற்றாளர்கள் எண்ணிக்கை

கொழும்பு, ஓக. 01

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 2 ஆயிரத்து 150 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்

15

## வவுனியாவில் ஏழு வயது சிறுமி கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

வவுனியா, ஓக. 01

வவுனியா, கனகராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்குளம் பகுதியில் கிணற்றில் இருந்து 7 வயது சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமியின் பெற்றோர் வீட்டில் இல்லாத வேளை அவர் அயல் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

எனினும், நீண்ட நேரமாகியும் சிறுமியைக் காணாத நிலையில் அயல் வீட்டார் தேடியுள்ளனர். இதன்போது அருகிலுள்ள கிணற்றில் சிறுமி விழுந்துள்ளமை கண்

15

## 7,28,460 அஸ்ட்ராசெனிக்கா தடுப்பூசிகள் வந்தன நேற்று

கொழும்பு, ஓக. 01

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவக்ஸ் திட்டத்தின் கீழ் ஜப்பான் அரசால் நன்கொடையாக வழங்கப்பட்ட 7 இலட்சத்து 28 ஆயிரத்து 460 அஸ்ட்ராசெனிக்கா தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்துள்ளன.

15

# இப்படியும் நடக்கிறது...!

ஒரு முக்கிய பிரமுகர் அவர். அரசியலில் நாட்டமில்லாதவர். ஆனாலும் ஆளுமையுள்ள ஒரு பிரமுகர்.

ஊர்க்குருவிக்கு தொலைபேசியில் அழைப்பை எடுத்தவர், “ஒரு தடவை உங்களைச் சந்திக்கலாமா”, என்று கேட்டார்.

“அதுக்கென்ன அண்ணே, தாராளமாகச் சந்திக்கலாம். எப்போது”, என்று சொல்லுங்கள் வீட்டுக்கு வருகிறேன் என்றேன்.

“இல்லை இல்லை நானே உங்களிடம் வருகிறேன்”, என்றார் அவர்.

“என்ன? நீங்கள் என்னை வந்து சந்திப்பதா? ஒரு சின்ன பத்தி எழுத்தாளர் நான். நீங்கள் எவ்வளவு....?”

பலத்த இழுபறிக்கு பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள உணவகம் ஒன்றில் சந்திக்க ஏற்பாடாகியது.

குறித்த நேரத்திற்கு வந்து சேர்ந்தார். என்ன சொல்லப்போகிறாரோ என்ற தவிப்பு இந்த ஊர்க்குருவிக்கு.

“...... (ஒரு பெயரை இங்கே குறிப்பிட்டார்) என்னை வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடக்கும்போது தமது வேட்பாளராக போட்டியிடச் சொல்லிக் கேட்கிறார். எனக்கு அந்த எண்ணமும் இருக்கவில்லை. அப்படி ஓர் ஆசையும் இல்லை. ஆனால், அவர் கேட்கும்போது முடியாது என்றால் பின்னர் ஏதாவது நெருக்கடி தருவாரோ என்று பயமாக இருக்கிறது”, என்றார்.

“அது சரி, அவர்கள் கட்சியில் கேட்டால் வெல்ல முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?”, என்று பட்டென்று கேட்டேன்.

“என்னை வெல்ல வைப்பது தனது வேலை என்றும் நான் கேட்டால் போதும் என்கிறார்”, என்றார்.

வெற்றி பெறுவது மக்கள் வாக்களிப்பில் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். அது எப்படி அவர் வெல்ல வைப்பது என்கிறார் என்பது எனக்குப் புரியவில்லை.

வடக்கு மாகாணத்திலுள்ள தமிழ்த் தேசிய வாக்குகள் ஒன்றாக திரட்சியாக ஓர் அணிக்கு கிடைக்காவிட்டால், அதாவது அவை மூன்று நான்கு அணிகளுக்கு பிரிந்து விடுமானால், தேசியக் கட்சி ஒன்றின் கூட்டு, அல்லது தமிழ் தேசியத்திற்கு எதிரான வாக்குகள் அனைத்தும் திரட்சியாக ஓர் அணிக்கு சென்றால் அந்த அணி வெற்றிபெற வாய்ப்பு உண்டு என்பதும் மறுப்பதற்கில்லை.

அத்தகைய ஒரு முயற்சி நடந்தாலும், அதாவது தமிழ்த் தேசியத்திற்கு எதிரான வாக்குகளை பெறக்கூடிய கூட்டு ஒன்று உருவாகுவதற்கான சந்தர்ப்பத்தையும் நிராகரிக்க முடியாது.

எனது ஆலோசனையைக் கேட்பதற்காக மரியாதை தந்து அழைத்தவர் அவர். எனக்கு மனதில் பட்டதை அவருக்கு சொன்னேன். “தமிழ் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து தேர்தலைச் சந்திக்க முடிவெடுத்தால், நீங்கள் கேட்பது நல்லதல்ல. நிலைமையை பொறுத்திருந்து பார்த்து முடிவெடுங்கள்”, என்று எனக்கு தெரிந்த ஆலோசனையை அவரிடம் சொல்லிவிட்டு விடைபெற்றேன்.

தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைக்க எடுக்கும் முயற்சிகளை சிலர் திட்டமிட்டு குழப்பியடிப்பதை பார்க்கின்றபோதும்,

முதல்வர் வேட்பாளராக ஒருவரை ஒருமித்த தெரிவாக தெரிவுசெய்யப்படுவதைக் குழப்ப சிலர் முயல்வதையும் பார்க்கின்றபோது, தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவான வாக்குகள் ஒரே திரட்சியாக ஓர் அணிக்கு வந்துவிடக்கூடாது என்பதில் தெற்கின் சில சக்திகளும் வடக்கில் ‘ஓடி விளையாடுகிறார்களோ’ என்று சிந்திக்காமலும் இருக்கமுடியவில்லை.

**- ஊர்க்குருவி**

# இலங்கையில் தொற்று அதிகரிக்கும் ஆபத்து!

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 01

இலங்கை உட்பட உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் கொவிட் 19 தொற்று நோய் மீண்டும் அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இலங்கையில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு மக்கள் அதிகளவில் ஒன்றுகூடிவரும் நிலை அவதானிக்கப்படுகிறது. அத்துடன், பொது சுகாதார நடைமுறைகள் சீராகப் பேணப்படவில்லை. சமமற்ற தடுப்பூசி பகிர்வு உள்ளிட்ட காரணிகளால் ஆபத்தான டெல்டா திரிபு மிகவும் வேகமாகப் பரவும் அபாய நிலை உள்ளதாக உலக சுகாதார அமைப்பின் இலங்கை அலுவலகம் நேற்றுக் காலை தனது உத்தியோக பூர்வ ருவிட்டர் பக்கத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொற்று நோயைக் கட்டுப்படுத்த கடந்த காலங்களில் இலங்கை எடுத்த கடுமையான முயற்சிகளின் பலாபலன்களை தற்போதைய நடவடிக்கைகளால் இழந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், இவ்வாறான கட்டுப்பாடற்ற போக்குகளால் தொற்று நோய் அதிகரித்து வைத்தியசாலைகள் முற்றாக பராமரிப்புத் திறனை இழக்கும் நிலை ஏற்படும் எனவும் அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் உலகம் முழுவதும் கடந்த வாரத்தில் 40 இலட்சம் தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸஸ் தெரிவித்தார். இவற்றில் பெரும்பாலாவை டெல்டா உரு திரிபு வைரஸுடன் தொடர்புடையவை எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய போக்கு தொடர்ந்தால் அடுத்த இரண்டு வாரங்களில் உலகில் மொத்த தொற்று நோயாளர் தொகை 200 மில்லியனைக் கடந்து அதிகரிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 01

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் கட்டளைக்கு அமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வட மாகாண உதவிப் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கு அமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், கல்வியங்காடு, கோப்பாய், அச்சுவேலி, நீர்வேலி ஆகிய பிரதேசங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு பால்மா தொடர்பாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டதுடன் விற்பனைக்கு மறுத்தமை மற்றும் சட்டவிரோதமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மேலும் எரிவாயு விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் பரிசோதனை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

கல்வி tv CHANNEL-1

**01.08.2021**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**01.08.2021**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
01.08.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# கூட்டமைப்பின் அடுத்த தலைவர்?

பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும்கூட, இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களின் பிரதான தலைமை என்னும் இடத்தை பெற்றிருக்கின்றது. தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மேலும் இரு கட்சிகள் இருந்தாலும்கூட, தமிழ் தேசிய கூட்டமைப்பே இராஜதந்திர சமூகத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு தலைமையாக இருக்கின்றது. இதற்கு ஒப்பீட்டடிப்படையில் கூட்டமைப்பு பெரும்பான்மையான மக்களின் ஆதரவை பெற்றிருப்பதே பிரதான காரணமாகும். அதேவேளை கூட்டமைப்பு தமிழ் மக்கள் மத்தியில் மேலும் பலவீனப்படுமாக இருந்தால், தமிழ் மக்களின் பேரம் பேசும் ஆற்றல் மேலும் பலவீனமடையும். தமிழ் தேசியத்தை பாதுகாக்க முயற்சிக்கும் எவருமே கூட்டமைப்பை முற்றிலுமாக சிதைக்க விரும்ப மாட்டார்கள்.

இந்த அடிப்படையிலேயே கூட்டமைப்பின் அடுத்த தலைமை தொடர்பான கேள்விகள் எழுந்திருக்கின்றன. சம்பந்தன் இருக்கின்றபோதே கூட்டமைப்பின் தலைமை தொடர்பில் சிந்திக்க வேண்டும். தமிழ்த் தேசிய அரசியல் நோக்கர்கள் மத்தியில், இவ்வாறானதோர் அபிப்பிராயம் எழுந்திருக்கின்றது. தமிழர் தாயகத்தில் இயங்கிவரும் அரசியல் செயல்பாட்டாளர்கள் பலர் இது தொடர்பில் தங்கள் கவலைகளை வெளியிடுவதை ஈழநாட்டால் அறிந்து கொள்ள முடிகிறது.

சம்பந்தனை பொறுத்தவரையில், அவர் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றார். சில முரண்பாடுகள் இருந்தாலும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் எவருமே சம்பந்தனின் தலைமைத்துவத்தோடு ஒரு போதுமே முரண்பட்டதில்லை. இதற்கு அவரின் வயதும், அனுபவமும், அங்கீகாரமுமே பிரதான காரணங்களாகும். ஆனால், சம்பந்தனுக்கு அடுத்தது யார் ? - என்னும் கேள்வி எழும் போது எவரிடமும் தெளிவான பதில் இல்லாமல் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கூட்டமைப்பின் தலைமைத்துவத்திற்கு வருபவர் நிச்சயம் கூட்டமைப்பை - ஒரு கூட்டமைப்பாக பாதுகாக்கக் கூடியவராக இருக்க வேண்டும். அதேவேளை பங்காளிக் கட்சிகளால் முரண்பாடின்றி, ஏற்றுக்கொள்ளக் கூடியவராகவும் இருக்க வேண்டும். இந்த பின்னணியில் சிந்தித்தால், தற்போதைய நிலையில் ஒரேயொரு வழி மட்டுமே இருக்கின்றது. இலங்கை தமிழ் அரசு கட்சியே கூட்டமைப்பின் தாய் கட்சியாக இருக்கின்றது. அந்த கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியே சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவராக இருக்கின்றார். அவருக்கு பின்னர் யார் என்று சிந்திக்கும் போது, நாம் மேலே குறிப்பிட்டவாறான தகுதிகளுடன் இருக்கும் ஒருவர் மாவை சேனாதிராசா மட்டுமே. பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மத்தியில் மாவை சேனாதிராசாவுடன் முரண்பாடுகள் காணப்படவில்லை. வயது, நீண்டகால அரசியல் வாழ்வு, அனைத்து தலைவர்களுடனும் பாரபட்சமில்லாமல் பழகக் கூடிய தகுதிநிலை - இப்படியான பண்புகளுடன் மாவை சேனாதிராசா மட்டுமே இருக்கின்றார்.

மாவை சேனாதிசாராசாவை புறம்தள்ளி பிறிதொருவரை சிந்திக்க முடியுமா? சிந்திக்கலாம், ஆனால், அதனால் கூட்டமைப்பு - கூட்டமைப்பாக இருக்குமா என்பதே கேள்வி! தமிழ் அரசு கட்சியில், கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் வேறு எவராலும் மாவையை பிரதீயிடு செய்ய முடியாது. மேலும், பங்காளிக் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒருவர் கூட்டமைப்பின் தலைவராக இருந்தால் மட்டும்தான் கூட்டமைப்பை தொடர்ந்தும் முன்கொண்டு செல்ல முடியும். இல்லாவிட்டால் நிச்சயம், சம்பந்தனுக்கு பின்னர் கூட்டமைப்பு சிதைவடைவதை தடுக்க முடியாது. இதனை கருத்தில் கொண்டே கூட்டமைப்பின் தலைவமைத்துவம் தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

கூட்டமைப்பின் தலைமை என்பது வெறுமனே தமிழ் அரசு கட்சியின், கூட்டமைப்பின் விவகாரம் அல்ல. மாறாக, இது தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்னை. தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் எதிர்காலம். தனிப்பட்ட அரசியல் முரண்பாடுகளை புறம்தள்ளி அனைவரும் சிந்திக்க வேண்டிய இடம் இது.

# திருடப்பட்ட கலைப் பொருட்களை திருப்பி கொடுக்கும் அவுஸ்திரேலியா

*இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்பட்ட அல்லது திருடப்பட்ட **14** கலைப் பொருட்களை மீண்டும் ஒப்படைக்க உள்ளது அவுஸ்திரேலியா.*

*இவற்றில் ஒரு கலைப் பொருளைத் தவிர மற்ற அனைத்தும், கலைப்பொருள் விற்பனை யாளர் மற்றும் கடத்தல்காரர் என்று குற்றம் சாட்டப்படும் சுபாஷ் கபூர் என்பவருடன் தொடர்புடையவை. இந்தியாவில் சட்ட விசாரணையை எதிர்கொண்டுள்ள சுபாஷ் கபூர் தம் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் மறுக்கிறார்.*



*மதம் மற்றும் கலாசாரம் சார்ந்த சிலைகள், புகைப்படங்கள் உள்ளிட்ட **2.2** மில்லியன் டொலர்கள் (சுமார் **15** கோடி இந்திய ரூபா) மதிப்பு கொண்ட, இந்தியாவுக்கு சொந்தமான கலைப் பொருட்கள் அவுஸ்திரேலிய தேசிய அருங்காட்சியகத்திடம் உள்ளன.*

*இவற்றை இந்தியாவிடமே திருப்பித்தரும் பட்சத்தில் "எங்கள் வரலாற்றின் மிக கடினமான ஓர் அத்தியாயம் முடிவடையும்" என இந்த அருங்காட்சியகத்தின் இயக்குநர் நிக் மிட்ஸ்வெச் தெரிவித்தார்.*

*இதில் சில பொருட்கள் தமிழகத்தின் சோழர் காலத்தை சேர்ந்தவை. **12**ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் இந்துக் கலைகள் வளர்ச்சியடைந்த போது செய்யப்பட்ட சில சிலைகளும் இதில் அடங்கும்.*

*இந்த பொருட்கள் அனைத்தும் அடுத்த சில மாதங்களில் இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*



*சுபாஷ் கபூர் மூலம் **2008** இல், ஐந்து மில்லியன் அமெரிக்க டாலர் கொடுத்து வாங்கப்பட்ட இந்து மதக் கடவுள் சிவனின் வெண்கல சிலை ஒன்று உள்பட பல கலைப் பொருட்களை கான்பெர்ராவில் உள்ள கலைப் பொருட்கள் அருங்காட்சியகம் திருப்பி அளித்துள்ளது.*

*கலைப்பொருட்கள் அனைத்தும் இன்னும் சில மாதங்களில் இந்திய அரசிடம் திரும்ப ஒப்படைக்கப்படும் என்று ஏ.எப்.பி செய்தி முகமையிடம் நிக் மிட்ஸ்வெச் தெரிவித்துள்ளார்.*

*"நன்னடத்தை மற்றும் நட்பை வெளிப்படுத்தும் அசாதாரணமான செயல் இது" என்று ஆஸ்திரேலியாவில் உள்ள இந்திய உயர் ஆணையம் (தூதரகம்) அவுஸ்திரேலிய அரசின் முடிவைப் பாராட்டியுள்ளது.*

*கலைப் பொருட்களை சட்ட ரீதியான மற்றும் நியாய ரீதியிலான கூறுகளின் அடிப்படையில் மதிப்பிட்டு அவற்றின் உண்மைத் தன்மையை கண்டறியும் வழிமுறையை தாங்கள் அறிமுகம் செய்துள்ளதாக அவுஸ்திரேலியாவின் தேசிய அருங்காட்சியகம் தெரிவித்துள்ளது.*

*கலைப் பொருட்கள் திருடப்பட்டோ, சட்டவிரோதமாக எடுக்கப்பட்டோ, வெளிநாடுகளில் இருந்து சட்டத்துக்கு புறம்பாக ஏற்றுமதி செய்யப்பட்டோ, நியாயமற்ற முறையில் வாங்கப்பட்டோ இருப்பதற்கான வாய்ப்புகள் இருந்தால், அவற்றை தங்கள் அருங்காட்சியகத்தில் இருந்து நீக்கிவிட்டு அந்தந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்று அவுஸ்திரேலிய தேசிய அருங்காட்சியகம் தெரிவித்துள்ளது.*

*சுபாஷ் கபூருக்கு எதிராக அமெரிக்காவில் பெரிய அளவில் விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.*

*"ஆப்ரேஷன் ஹிட்டன் ஐடால்" சட்ட நடவடிக்கை மூலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல நூறு கலைப்பொருட்கள் அவரிடமிருந்து மீட்கப்பட்டன.*

*மன்ஹட்டன் நகரத்தில் "ஆர்ட் ஒப் தி பாஸ்ட்" (Art of the Past) எனும் பெயரில் கலைப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்று இவர் நடத்தி வந்தார். **2012**ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முதல் முறையாக அமெரிக்க அரசு அதிகாரிகள் சோதனை செய்தனர்.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
உங்கள் கடின உழைப்பை மற்றவர்கள் புரிந்து கொள்வார்கள். எதிரி என நினைத்தவரும் நெருங்கி வந்து நன்மை செய்வார்கள். நண்பர் களுக்கு உதவி செய்வீர்கள். உடல்நிலை சீராகும்.

**இடபம்**
பணியாளர்கள் எடுத்த பணியை நிறைவேற்ற சற்று திண்டாடுவீர்கள். திருமணத்திற்கு காத் திருப்பவர்களுக்கு நல்ல செய்தி வந்து சேரும். குடும்ப அமைதி திருப்தி தரும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**மிதுனம்**
திட்டமிட்டு செயல்படுவீர்கள். பணத்தேவை நிறை வடையும். குழந்தைகள் உடல் நலனில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். குடும்பக் கவலை தீரும். பணியாளர்கள் செல்வாக்குடன் திகழ்வர்.

**கடகம்**
வீண்பயம் ஏற்பட்டு விலகும். தவறு செய்யும் நபர்களுடன் நட்பு வேண்டாம். உடல்நலனில் அக் கறை தேவை. மருத்துவ சிகிச்சையை மேற்கொள் வது நல்லது. மனக்கவலை தீரும். நட்பு கிடைக்கும்.

**சிம்மம்**
போட்டி பந்தயங்களில் பங்கேற்பவர்களுக்கு நற் செய்தி கிடைக்கும். மனதில் உற்சாகம் அதிகரிக் கும். சாதுர்ய பேச்சால் நன்மை காண்பீர்கள். விஷ யங்களை அடுத்தவரிடம் பகிர வேண்டாம்.

**கன்னி**
தேவையற்ற பேச்சால் சிக்கலில் மாட்ட வாய்ப் புண்டு கவனம். நம்பியவர்களிடம் ஏமாற இட முண்டு. பிள்ளைகளால் நன்மை ஏற்படும். தன்னம் பிக்கை குறைய அனுமதிக்காதீர்கள்.

**துலாம்**
எதிரியால் கூட நன்மை கிடைக்கும். நல்ல தக வல் வந்து சேரும். மனநிறைவு காண்பீர்கள். பிற ருக்கு முடிந்தளவு உதவி செய்வீர்கள். சகோ தர வழியில் உதவி கிடைக்கும். உடல்நிலை சீராகும்.

**விருட்சிகம்**
வழக்கமான பாணியை விட்டுப் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வாகன பயணம் இனிமை தரும். கவலைக்கு நல்ல முடிவு கிடைக்கும். புதிய மனிதர்களின் அறிமுகத்தால் நன்மை.

**தனுசு**
வீடு, நிலம் போன்ற புதிய முதலீடுகளைத் தள்ளிப் போடுங்கள். செல்வாக்கு மேலோங்கும். பண வரவு நன்றாக இருக்கும். பணிச்சுமையை சமாளிப் பீர்கள். பக்தி எண்ணம் மேலிடும்.

**மகரம்**
பிரச்னை மறையும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. அதிகாரிகளுடன் ஏற்பட்ட வாக்குவாதம் முடிவுக்கு வரும். கணவர், மனைவிவழி உறவி னர்கள் தோள் கொடுத்து உதவுவர்.

**கும்பம்**
வெளிநாட்டில் உள்ள மகன், மகளிடமிருந்து சுப செய்திகள் வரும். பேச்சில் கவனம் தேவை. பணியில் அலட்சிய எண்ணம் வேண்டாம். குடும் பத்தினரின் ஆதரவால் நன்மை காண்பீர்கள்.

**மீனம்**
நிறையச் செலவுகள் வந்தாலும் மனதில் சந் தோஷம் மேலோங்கும். திட்டமிட்டபடி வீடு, வாகனம் வாங்கிப் பெருமிதம் கொள்வீர்கள். செய்யும் பணிக்கேற்ற வருமானம், மகிழ்ச்சி.

## ஒரு அஞ்சலிக் குறிப்பு!



# பன்முகங்கொண்ட தனித்தமிழ் அருவி

**மதுரை தமிழ்ச் சங்கம் குறித்த வரலாற்று நூலையும் இவர் எழுதியிருக்கிறார். மொத்தம் இவர் எழுதிய நூல்கள் 550. திரு.வி.க. போல இறுதிக்காலத்தில் கண்பார்வை பறிபோய்விட்டால், தன்னுடைய எழுத்துப் பணி பாதிக்கப்பட்டுவிடக் கூடாதே என்பதற்காக கண்களை மூடியே எழுதும் திறனை வளர்த்துக்கொண்டவர் இவர்.**

**கே.கே.மகேஷ்**

தமிழக அரசின் திரு.வி.க. விருது பெற்ற மூத்த தமிழறிஞரான முதுமுனைவர் இரா.இளங்குமரனார் கடந்த வாரம் காலமானார். அவருக்கு வயது 94. இறுதி நிகழ்ச்சிகள் மதுரை திருநகர் இராமன் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

முதுமுனைவர் இரா.இளங்குமரனார் 30.1.1927 இல் நெல்லை மாவட்டம் வாழவந்தாள்புரம் கிராமத்தில் பிறந்தவர். தந்தை படிக்கராமு, தாயார் பெயர் வாழவந்த அம்மை. இளம் வயதிலேயே சொந்தமாக பாடல் இயற்றும் அளவுக்கு தமிழ் ஆர்வமும், புலமைத்திறனும் பெற்ற இவருக்கு 19 வயதிலேயே (4.8.1946) சங்கரன்கோவில் அருகில் உள்ள கரிவலம்வந்த நல்லூர் பள்ளியில் தமிழாசிரியர் பணி கிடைத்தது. பிறகு முறைப்படி புலவர் படிப்புக்கான தேர்வு எழுதி, 1951 இல் சென்னை பல்கலைக்கழகத்தில் முதல் வகுப்பில் வெற்றிபெற்றார்.

முழுமையாக கிடைக்கப் பெறாமல், காலத்தால் செல்லரித்துப் போன குண்டலகேசி காப்பியத்தை தன்னுடைய கற்பனைத் திறனாலும், கவிதை இயற்றும் ஆர்வத்தாலும் முழுமை செய்தவர். அந்நூலினை 1958 இல் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் அரங்கேற்றம் செய்தார்.

1963 இல் இவர் எழுதிய திருக்குறள் கட்டுரை தொகுப்பு நூலை, தமிழகம் வந்திருந்த அன்றைய பிரதமர் நேரு வெளியிட்டார். தேவநேயப் பாவாணர், பாவேந்தர் பாரதிதாசன், தொல்காப்பியர் ஆகியோரின் முழு படைப்புகளையும் தொகுக்கிற பணியும் அவர் செய்தார். அந்நூல்களை தமிழ்மண் பதிப்பகம் இளவழகன் செம்பதிப்பாக வெளியிட்டார்.

காரைக்குடி அருகே உள்ள திருக்கோவிலூர் மடம் சார்பில், சங்க இலக்கிய வரிசை நூல்களைத் தொகுக்கும் பணி நடைபெற்றபோது அதில் புறநானூற்றை எளிய தமிழில் எழுதியவரும் இவரே. இந்தத் தொகுப்பு நூலை 2003 ஆம் ஆண்டு அன்றைய இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் வெளியிட்டார். இவரது நூல்கள் பலவற்றை மதுரை பாரதி புத்தக நிலையமும் வெளியிட்டுள்ளது.

**தமிழ் முறைத் திருமணங்கள்**

தமிழர்கள் நீண்டகாலமாக கடைபிடித்து வந்ததும், பழந்தமிழ் இலக்கியங்களில் சொல்லப்பட்டதுமான முறையில் திருமணங்களை நடத்தி வைப்பதில் ஆர்வம் காட்டினார். 1951 இல் தொடங்கிய இந்தப் பணியை, தனது 92 வயது வரையில் அவர் தொடர்ந்தார். இதுவரைவில், 4,865 தமிழ் முறைத் திருமணங்களை நடத்தி வைத்திருக்கிறார். தற்போது அவரது மாணாக்கர்கள் அந்தப் பணியைத் தொடர்கிறார்கள்.

திருச்சியில் திருவள்ளுவர் தவச்சாலை என்ற பெயரில் தமிழ்ப்பணி ஆற்றிவந்த இவர், அங்கே 45,000 நூல்கள் கொண்ட நூலகத்தையும் நடத்தினார். பிற்காலத்தில் அதில் 40 ஆயிரம் நூல்களை எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்துக்கு நன்கொடையாக வழங்கினார்.

வயது முதிர்வு காரணமாக மதுரை திருநகருக்கே திரும்பிய பின்னரும் கூட அவர் தமிழ்ப்பணியை நிறுத்திக்கொள்ளவில்லை. மதுரை வடக்குமாசி வீதியில் உள்ள மணியம்மை பள்ளியில் மாதந்தோறும் நடைபெறுகிற கருத்தரங்குகளில் பங்கேற்றார்.

கூடவே, இளம் பிள்ளைகளுக்கு பழந்தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் தொல்காப்பியம், திருக்குறள், திருமுருகாற்றுப்படை, பொருநர்ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு என்று எழுதினார்.

சுமார் 20, 30 பக்கங்களே கொண்ட இந்தக் குறுநூல்களை மதுரை புரட்சிக் கவிஞர் மன்றம் மாதந்தோறும் வெளியிட்டு, நிறைய பேருக்கு கொண்டு சேர்த்தது. மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் மிகமூத்த ஆட்சி மன்றக் குழு உறுப்பினரும் இவரே.

மதுரை தமிழ்ச் சங்கம் குறித்த வரலாற்று நூலையும் இவர் எழுதியிருக்கிறார். மொத்தம் இவர் எழுதிய நூல்கள் 550. திரு.வி.க. போல இறுதிக்காலத்தில் கண்பார்வை பறிபோய்விட்டால், தன்னுடைய எழுத்துப் பணி பாதிக்கப்பட்டுவிடக் கூடாதே என்பதற்காக கண்களை மூடியே எழுதும் திறனை வளர்த்துக்கொண்டவர் இவர்.

1978 ஆம் ஆண்டிலேயே ஆளுநர் கையால் நல்லாசிரியர் விருது பெற்ற இவர், அதன் பிறகு எண்ணற்ற விருதுகளை பெற்றிருக்கிறார். 1991இல் ஈரோடு வேலா.ராசமாணிக்கத்தின் குரலியம் அமைப்பு இவருக்கு செந்தமிழ் அந்தனர் பட்டம் தந்தது. 1994 இல் தமிழக அரசு திருவிக விருது கொடுத்து சிறப்பித்தது

1995 இல் மதுரை ஆடி வீதி திருவள்ளுவர் கழகம் சார்பில் திருக்குறள் செம்மல் விருது, 1996-ல் திருச்சி தமிழ் சங்க விருது, 1995இல் திருச்சி மாவட்ட திருக்குறள் பேரவை சார்பில் குன்றக்குடி அடிகளார் கொடுத்த குறள் ஞாயிறு விருது, 1997 மதுரை புரட்சிக் கவிஞர் மன்றம் சார்பில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி கொடுத்த பெரியார் விருது, 1999 இல் சென்னை தமிழ் சான்றோர் பேரவை (நகலகம் அருணாசலம்) தந்த மொழிப்போர் மறவர் விருது, 2000இல் சென்னை கம்பன் கலகம் சார்பில் கம்பர் விருது வழங்கப்பட்டது.

2003இல் பதிப்புச் செம்மல் மெய்யப்பன் வழங்கிய தமிழ் இயக்க செம்மல் விருது, 2004இல் திருவாடுதுறை மடம் சிவப்பிரகாச அடிகளார் வழங்கிய திருக்குறள் செம்மல் விருது, 2004இல் பழ.நெடுமாறன் வழங்கிய உலகப் பெருந் தமிழர் விருது, அதே ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் வழங்கிய தமிழ் செம்மல் விருது, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் வழங்கிய முது முனைவர் விருது, எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் வழங்கிய ரூ.5 லட்சம் பரிசுடன் கூடிய வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

வடஅமெரிக்க தமிழ்ச்சங்க கூட்டமைப்பு வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது, கனடா இலக்கியத் தோட்ட விருது போன்றவை அவர் பெற்ற விருதுகளில் குறிப்பிடத்தக்கவை. பெற்ற விருதுகளுக்கான பரிசுத் தொகையை தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கே செல விட்டவர் இரா.இளங்குமரனார். ■

# ஹிஷாலினி மரணத்தை மறைக்க முயன்ற பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் சிக்கலில்!

கொழும்பு, ஓக. 01

**முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் மர்மமான முறையில் தீப்பற்றி உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் உறவினர்களுக்கு அழுத்தம் கொடுத்த மூத்த பொலிஸ் அதிகாரி தொடர்பான விரிவான விசாரணையை பொலிஸ் திணைக்களம் தொடங்கியுள்ளது. அவர் கைதாகவும் வாய்ப்புள்ளதாக சிங்கள ஊடகங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த மூத்த அதிகாரி, சிறுமியின் உறவினர்களை சந்தித்து, "அமைச்சரும் அவரது குடும்பத்தினரும் மிக முக்கியமான நபர்கள்" என்று கூறினார். "அவர்கள் இது போன்ற செயல்களைச் செய்வதில்லை. இந்த விவகாரத்தை தொடர்ந்து இழுக்க வேண்டிய அவசியமில்லை. இதை பொலிஸூக்கு எடுத்துச் செல்லத் தேவையில்லை. ஐம்பதாயிரம் ரூபாயைப் பெற்று இதை முடித்துக் கொள்வோம். இது ஒரு சாதாரண தற்கொலை. அதை இழுத்துச் செல்லவேண்டாம்" என்று அந்த அதிகாரி ஹிஷாலியின் சகோதரர்களுக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் அழுத்தம் கொடுத்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

ஹிஷாலியின் மரணத்துக்குப் பிறகு அவரது சகோதரர்கள் உட்பட நெருங்கிய உறவினர்கள் பொலிஸாரிடம் அளித்த வாக்குமூலங்களில் இந்த அதிகாரி கொடுத்த அழுத்தம் பற்றிய தகவல்கள் தெரியவந்தது.

பின்னர், அதிகாரியைக் கண்டுபிடிக்க ஒரு சிறப்பு பொலிஸ் குழு விசாரணையைத் தொடங்கியது. அந்த அதிகாரி பொலிஸ் தலைமையகத்தில் பணியில் இருந்த மூத்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் என்பது தெரியவந்தது என செய்தி வெளியிட்டுள்ள சிங்கள ஊடகங்கள், முஸ்லிம் பொலிஸ் அதிகாரியொருவரின் பெயரை இந்த விவகாரத்தில் இணைத்து செய்தி வெளியிட்டுள்ளன.

அதிகாரியின் தொலைபேசி பதிவுகளின் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அவர் விசாரிக்கப்படுவார் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அதிகாரி ரிஷாத் பதியுதீனின் முன்னாள் பாதுகாவலர். அவர் பதியுதீன் குடும்பத்தின் நெருங்கிய நண்பர்.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் ஹிஷாலினி தீயில் எரிந்ததும், பதியுதீனின் மனைவியின் தந்தை, அந்த பொலிஸ் அதிகாரியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நடந்த சம்பவம் குறித்து தகவல் கொடுத்தார்.

பொலிஸ் அதிகாரி உடனே பதியுதீனின் வீட்டுக்குச் சென்று அந்த நேரத்தில் அங்கிருந்த ஹிஷாலியின் உறவினர்களைச் சந்தித்து சம்பவத்தை மறைக்க அவர்களுக்கு அழுத்தம் கொடுத்தது தெரியவந்துள்ளதாக அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காரைதீவு தவிசாளருக்கு எதிராக முஸ்லிம் மக்கள் போர்க்கொடி!

அம்பாறை, ஓக. 01

நபிகள் நாயகத்தை விமர்சிக்கும் வகையில் அவதூறு பரப்பிய காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு எதிராக பல்வேறு பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் காரைதீவு பிரதேச சபை முஸ்லிம் உறுப்பினர்கள், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர், பொது அமைப்புக்கள், அரசியல் செயற்பாட்டாளர் எம்.ஐ. முஹம்மத் றணூஸ், சமூக செயற்பாட்டாளர் ஐ.எல். அப்துல் மஜீத் ஆகியோர் சம்மாந்துறை பொலிஸில் தமது முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளதுடன் தேசிய காங்கிரசின் முக்கியஸ்தர் அல்ஹாபிழ் சட்டத்தரணி கே.எல். சமீம் அம்பாறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

மேலும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் ஸ்தாபக செயலாளரும் சட்டத்தரணியுமான வை.எல்.எஸ். ஹமீட் யாரோ ஒருவர் தனது முகநூலில் பதிவிட காரைதீவு பிரதேச சபைத் தலைவரால் பகிரப்பட்ட முஸ்லிம்களுக்கு உயிரிலும் மேலான நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களை அவதூறு செய்யும் பதிவு மிகவும் கண்டிக்கத்தக்கது. இது மதநிந்தனை செய்கின்ற, இனங்களுக்கிடையே மத வெறுப்பை, பகைமையைத் தூண்டுகின்ற ஒரு செயலாகும். என்று தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் முகப்புத்தக கணக்கொன்றினுடாக விளக்கமளித்த காரைதீவு தவிசாளர் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# டயகம சிறுமி மரணத்துக்கு நீதி வேண்டி மட்டக்களப்பில் கவனயீர்ப்பு போராட்டம்

துஷ்பிரயோகத் துக்குள்ளாக்கப்பட்டு உயிரிழந்த சிறுமி ஹிசாலினுக்கு நீதிவேண்டி மட்டக்களப்பில் நேற்று காலை கவனஈர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பாக தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரனின் வழிகாட்டலின் கீழ் கட்சியின் ஊடக செயலாளர் கே.லிங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் மகளிர் அணியின் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் துஷ்பிரயோகத்துக்கு ள்ளாக்கப்பட்டு உயிரிழந்த சிறுமி ஹிசாலினிக்கு நீதி கிடைப்பதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் விரைவான நடவடிக்கையெடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

அத்துடன் இனிவரும் காலங்களில் சிறுவர் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பும் வகையில் முறையான சட்டத்தை கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கையெடுக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தனர். சிறுமிக்கு நடந்த கொடுமைக்கு நீதி கேட்டு முன்னெடுக்கப்படும் இவ்வாறான போராட்டங் களை சிலர் இனத்துக்கு எதிரான போராட்டமாக சித்தரித்து இனங்களிடையே பகைமையை ஏற்படுத்த முனைவதாக இங்கு கருத்து தெரிவித்த தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஊடக செயலாளர் கே.லிங்கேஸ்வரன் தெரிவித்தார்.

# தனிமைப்படுத்தப்பட்டிருந்த சகல பகுதிகளும் விடுவிப்பு

கொழும்பு, ஓக. 01



இலங்கையில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த அனைத்து பகுதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை முதல் யாழ்ப்பாணம் - வடமராட்சி வடக்கு கிராம அலுவலர் பிரிவும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இலங்கையில் நேற்று முன் தினம் மாத்திரம் **2,455** பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை **306,657** ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் கொரோனா தொற்றில் இருந்து **275,212** பேர் பூரணமாக இதுவரை குணமடைந்துள்ளதுடன் உயிரிழந்தோரின் எண்ணிக்கை **4,380** ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்க தகவல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது

# ரிஷாத் கட்சியைச் சேர்ந்த மூவரையும் நீக்கமுடியுமா?

## அரசுக்கு சவால் விடும் ஹெக்டர் அப்புஹாமி

கொழும்பு, ஓக. 01

அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட 20 ஆவது திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்வதற்குப் பங்களிப்பை வழங்கிய ரிஷாத் பதியுதீனின் கட்சியைச் சேர்ந்த மூவருக்கு அமைச்சுப்பதவிகளை வழங்குவதற்கு ஆளுந்தரப்பு வாக்குறுதியளித்துள்ளது. எனவே தற்போது எதிரணிமீது குற்றஞ்சாட்டும் அரசாங்கம், இயலுமாக இருந்தால் ரிஷாத் பதியுதீனின் கட்சியைச் சேர்ந்த மூவரையும் ஆளுந்தரப்பிலிருந்து உடனடியாக நீக்குவதாகப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி சவால் விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியில் தலைமைக்காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தற்போதைய அரசாங்கம் மாத்திரமன்றி, கடந்த காலங்களில் ஆட்சி செய்த அனைத்து அரசாங்கங்களும் பொறுப்புக் கூறவேண்டும். அரசாங்கமொன்றினால் இழைக்கப்பட்ட தவறுகளைத் திருத்துவதற்காகப் பிறிதொரு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முன்னரை விடவும் மோசமானதாகக் காணப்படுகின்றன. அந்தவகையில் ஏற்கனவே கூறியவற்றுக்கு முற்றிலும் முரணான வகையில் செயற்படுகின்ற அரசாங்கமாகவே தற்போதைய பொது ஜன பெரமுன அரசாங்கம் விளங்குகின்றது.

நாட்டின் பொருளாதாரத்தின் தற்போதைய முன்னெடுக்கப்பட்டுவரும் கொவிட் - 19 தடுப்பூசி வழங்கல் செயற்திட்டமானது அரசாங்கத்தினால் முழுவதுமான அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஏனைய உலகநாடுகள் தடுப்பூசி வழங்கல் நடவடிக்கையை ஆரம்பித்தவேளையில், இலங்கை அரசாங்கம் அதனைத் தொடர்ச்சியாகத் தாமதப்படுத்திவந்தது. அதன் காரணமாக நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் பொருளாதார ரீதியில் அனைத்துத் துறைகளும் முழுமையான ஸ்தம்பிதமடைந்தன.

மேலும் தற்போது உலக சுகாதார ஸ்தாபனத்தினால் உரியவாறு அங்கீகாரமளிக்கப்படாத சினோவெக்ஸ் தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, மறுபுறம் தடுப்பூசி தொடர்பான இலங்கையின் விசேட நிபுணர்குழுவிலிருந்து அடுத்தடுத்து பலர் விலகியிருக்கின்றார்கள். இவ்வாறானதொரு சூழ்நிலையில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு மற்றும் பொதுமக்களின் சுகாதாரத்தை மையப்படுத்தியதாக தடுப்பூசி வழங்கல் தொடர்பான தேசிய செயற்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயாரிக்கப்படவேண்டும். எனவே இதுவிடயத்தில் எதிர்க்கட்சிகளைக்கண்டு அஞ்சாமல், அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து, அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு செயற்படுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றோம்.

ரிஷாத் பதியுதீன் எமது கட்சியைச் சேர்ந்தவரல்லர். அரசாங்கம் அதன் இயலாமையை மூடிமறைப்பதற்காகப் பயன்படுத்திக்கொள்கின்ற ஒரேயொரு விடயமாகவே இதனைக் கருதவேண்டியிருக்கின்றது. ரிஷாத் பதியுதீன் தேர்தலின்போது எமது கட்சியுடன் கூட்டிணைந்த அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியின் தலைவராவார். அரசமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறுவதில் அவரது கட்சியின் பிரதிநிதிகள் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். அதன் காரணமாகவே இப்போது பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கும் அமெரிக்கப் பிரஜையொருவர் எமது நாட்டின் நாணயத்தாள்களில் கையெழுத்திடுவதற்கும் வாய்ப்பேற்பட்டிருக்கின்றது.

எனவே அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கான வாக்குறுதிகள் தற்போதைய அரசாங்கத்தினாலேயே வழங்கப்பட்டிருக்கின்றன. ரிஷாத் பதியுதீன் எமது கட்சியின் பொருளாளர் அல்லர். மாறாக ஹர்ஷ டி சில்வாவே ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாளராவார். எனவே இவ்விடயத்தை மையப்படுத்தி அரசாங்கம் எம்மீது சேறுபூசுவதற்கான முயற்சிகளிலேயே ஈடுபட்டு வருகின்றது. ரிஷாத் பதியுதீன் மீதான வழக்கு விசாரணைகளுக்கு முன்பதாக, அவரது கட்சியைச் சேர்ந்த மூவரையும் அரசாங்கத்தை விட்டு நீக்குமாறு நாம் ஆளுந்தரப்பினருக்கு சவால் விடுகின்றோம்.

முடியுமாக இருந்தால் அமைச்சுப் பதவி உள்ளடங்கலாக எந்தவொரு வரப்பிரசாதங்களையும் வழங்காமல் அவர்களை அரசாங்கத்திலிருந்து நீக்கியிருப்பதாக அரசாங்கம் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்-என்றார்.

# தொற்று பரவல் அதிகரித்தால் நிச்சயம் மீண்டும் முடக்கம்!

## சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை

கொழும்பு, ஓக.01

நாட்டில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் காணப்பட்டதைப் போன்று கொவிட் பரவலில் கணிசமானளவு அதிரிப்பை இவ்வாரத்தில் அவதானிக்க முடிகிறது. புதனன்று 1900 தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் வியாழக்கிழமை 2370 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தற்போது பல பிரதேசங்களிலும் டெல்டா தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ள நிலையில் , கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பில் டெல்டா தாக்கம் செலுத்தக் கூடும் என்று சுகாதார தரப்பு தெரிவித்துள்ளது.

தற்போது மீண்டும் நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில் நாட்டை முடக்கினால் மாத்திரமே தொற்றுப் பரவல் தீவிரமடைவதைத் தடுக்க முடியும் என்றால் , நிச்சயம் மீண்டும் முடக்கத்திற்கு செல்ல வேண்டியேற்படும். ஆனால் வைரஸ் பரவலுக்கு அஞ்சி பின்வாங்காமல் அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி சகலரும் பொறுப்புடன் செயற்பட்டால் இந்த நிலைமையிலிருந்து மீள முடியும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளமைக்கான காரணம் டெல்டா வைரஸ் என்று உறுதிப்படுத்தப்படவில்லை.

அவ்வாறு கூறுவது கடினமாகும். காரணம் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட சகலருக்கும் டெல்டா தொற்று காணப்படுகிறதா என்பதை இனங்காண்பதற்கான மரபணுவின் ஒழுங்கமைப்பை அறியும் பரிசோதனை செய்வது நடைமுறை சாத்தியமற்றது.

எவ்வாறிருப்பினும் தற்போது வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் தொற்றாளர் களில் பெருமளவானோருக்கு தீவிரமான சிகிச்சை அறிகுறிகள் காணப்படுவதோடு , ஒட்சிசன் தேவையுடையோராகவும் உள்ளனர். எனவே கொவிட் பாதிப்புக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்-என்றார்.

# முடக்கத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவு

மன்னார், ஓக. 01

நாடளாவிய ரீதியில் பயணத்தடை நீக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உப்புக்குளம் பகுதியில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களை முதன்மைப்படுத்தி ஒரு தொகுதி நிவாரணப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் மத நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையில் தொடர்பாடலுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் அதன் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஜோன்சன் தலைமையில் உப்புக்குளம் பகுதியை சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

உப்புக்குளம் கிழக்கு, மேற்கு பகுதியை சேர்ந்த குறித்த சுமார் 70 குடும்பங்களுக்கு 2000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய நிவாரணப் பொதிகளை மன்னார் நகர் பிரதேச செயலாளர் ம. பிரதீப் உப்புக்குளம் கிராம சேவகர், தேசிய சமாதானப் பேரவையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் மெடோசன் பெரேரா, மதத் தலைவர்கள் இணைந்து வழங்கினர்.

# சுற்றுலாத்துறையை மீளக்கட்டியெழுப்ப அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, ஓக. 01

உலகம் எதிர்கொண்டுள்ள வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் தயார் நிலையில் உள்ளது என நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலுடன் தொடர்புடைய ஹோட்டல் உரிமையாளர்கள், விமான சேவை நிறுவனத்தினருடன் நிதியமைச்சில் இடம் பெற்ற பேச்சின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சுற்றுலாத்துறை சேவையினை மீண்டும் கட்டியெழுப்ப அரசாங்கம் சுகாதார தரப்பினரது ஆலோசனைகளை பெற்றுள்ளது.

சுற்றுலாத்துறை சேவையை கட்டியெழுப்ப பிற நாடுகள் நிவாரணப் பொதி முறைமையை சுற்றுலாத்துறை சேவையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ்வாறான செயற்திட்டங்கள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை மீள் கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் சேவை துறையினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்-என்றார்.

# அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்துக்கு ஆதரவு

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

கொழும்பு, ஓக. 01

ஆசிரியர் அதிபர்களின் சம்பள முரண்பாட்டிற்கு அரசாங்கத்தால் இதுவரையில் சாதகமான தீர்வைக் காண முடியவில்லை. நாடளாவிய ரீதியில் ஆசிரியர்கள் முன்னெடுத்து வரும் போராட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி தனது முழுமையான ஆதரவை வழங்க உள்ளதாக தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கம் மீது கடும் அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

எதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் அல்லது எதற்கு முன்னுரிமை வழங்கக் கூடாது என்பது குறித்து அரசாங்கத்துக்கு எந்தவொரு திட்டமும் நோக்கமும் இல்லை. நாட்டின் மாணவர்கள் கல்வி சம்பந்தமாக ஒரு பயங்கரமான அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர்.

மறுபுறம் இணைய வழிக் கல்வி முறைமை இன்னும் முறையாக இடம் பெறுவதாக இல்லை. அரசுக்கு சொந்தமான ஊடக நிறுவனங்களைப் பயன்படுத்தி மாணவர்களின் கற்றல் பிரச்சனைக்கு தீர்வு காண முயற்சிக்கவும் இல்லை. இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளினால் அரசாங்கம் மீது கடும் அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டியுள்ளது-என்றார்.

# போதைப் பாவனையாளர்களுக்கு வலி நிவாரண மாத்திரை விற்பனை

கொழும்பு, ஓக. 01

வலி நிவாரண மாத்திரைகளை போதை பாவனையாளர்களுக்கு விற்பனை செய்த இருவர் வாழைச்சேனைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கறுவாக்கேணி வீதியில் வைத்து 38 வயதுடைய பிரபல போதை மாத்திரை வியாபாரியும் 27 வயதுடைய இளைஞரும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வலி நிவாரண மாத்திரைகளை போதை நோக்குடன் பாவிப்பது மற்றும் விற்பனை செய்வது தொடர்பில் வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வாழைச்சேனை குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 1,500 போதை மாத்திரைகள் அடங்கிய 50 போதை மாத்திரைப் பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், முதற்கட்ட விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள குறித்த போதை மாத்திரை வியாபாரி மட்டக்களப்பிலிருந்து போதை மாத்திரைகளைக் கொண்டு வந்து ஓட்டமாவடி, மீராவோடை, செம்மண்ணோடை, மாஞ்சோலை, பிறைந்துரைச்சேனை, காவத்தமுனை மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கும் விற்பனை செய்து வந்துள்ளமை தெரிய வருகின்றது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினரும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் போதையொழிப்பு நடவடிக்கையின் ஒரு அங்கமாகவே குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# 9 மில்லியனுக்கு மேல் தடுப்பூசி என்ற மைல் கல்லை கடந்துள்ள இலங்கை!

கொழும்பு, ஓக. 01

இலங்கையில் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் 5 இலட்சத்துக்கு மேற்பட்ட தடுப்பூசிகள் இலங்கையில் போடப்பட்ட நிலையில் நாட்டில் மொத்தமாக இதுவரை 9 மில்லியனுக்கு மேற்பட்ட தடுப்பூசிகள் நிர்வகிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் நாடெங்கும் 513,820 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது.இவற்றுடன் மொத்தமாக நேற்று முன் தினம் மாலை வரையான தரவுகளின்பிராகரம் 9,176,738 தடுப்பூசிகள் நிர்வகிக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் இலங்கையில் 30 வயதுக்கு மேற்பட்ட மொத்த மக்கள்தொகையில் 80 வீதத்துக்கும் அதிகமானோர் குறைந்தபட்சம் ஒரு கொவிட் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இதே வயதுப் பிரிவினரில் 18 வீதமானவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் முழுமையாகப் பெற்றுள்ளனர்.

அதிகளவாக 6,324,298 பேர் சினோபார்ம் ஒற்றை தடுப்பூசியை நேற்று முன் தினம் வரை பெற்றுள்ளனர். 1,486,542 பேர் சினோபார்ம் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சின் தடுப்பூசி கண்காணிப்புப் பிரிவு தரவுகள் தெரிவிக்கின்றன.

# ஜெயசிறில் விடயத்தில் அமைதி காக்க கோருகிறது அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம்

காரைதீவு பிரதேச சபை தவி சாளர் கிருஸ்ணபிள்ளை ஜெய சிறில் முகம்மது நபியை இழிவு படுத்திய விவகாரத்தில் அறிக் கைகளை விடுவதையும், அவ ருக்கு எதிராகவும், ஏனைய சமூகத்திற்கு எதிராகவும் வன் சொற்களை விடுவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு முஸ்லிம் சமூகத்தை சார்ந்த உறவுகளிடம் கேட்டுக்கொள்வதுடன் தீர ஆராய்ந்து அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் தயாராகி வருவதாக அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் எஸ்.எம். சபீஸ் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், முஹம்மது நபியையோ அல்லது இஸ்லாமிய வரலாற்றையோ யாரும் இழிவுபடுத்த விட முடியாது. அப்படி செய்யும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்று கருத்துக்கள் இல்லை. நேற்று நிந்தவூரில் இடம்பெற்ற அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன கூட்டத்தில் இது தொடர்பில் ஆராயப்பட்டதுடன் இது தொடர்பில் ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கையை எடுத்துள்ளோம். ஆகவே யாரும் இந்த விடயத்தில் அவசரப்பட்டு ஒருவர் விட்ட பிழைக்காக ஏனைய சமூகத்தை சீண்டாமல் தவிர்ந்து இருந்து அமைதிகாக்குமாறும் இந்த விடயத்தை தீர ஆராய்ந்து நடந்தவற்றை கொண்டு அடுத்த கட்ட நகர்வை மேலும் செய்ய அம்பாறை மாவட்ட அனைத்துப்பள்ளிவாசல்கள் சம்மேளனம் தயாராகி வருகிறது - என்றார்.

ஈழநாடு



# 13 மாதங்களில் 3 முறை தொற்று!

## 2 டோஸ் தடுப்பூசி போட்டபின்னும் இரண்டு முறை பாதிப்பு





**மயாங்க் பக்வத்**

“எனக்கு மூன்று முறை கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதுவும் இரண்டு டோஸ்கள் தடுப்பூசி எடுத்துக் கொண்ட பிறகு இரு முறை கொரோனாவால் பாதிக்கப்பட்டேன். என்னால் நம்ப முடியவில்லை. இது எப்படி சாத்தியம்?”

26 வயதாகும் மருத்துவர் ஸ்ருஷ்டி ஹெலரிக்கு கடந்த 13 மாதங்களில் மூன்று முறை கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது

அதில் குறிப்பாக கொரோனா தடுப்பூசியான கோவிஷீல்ட்டின் இரண்டு டோஸ்களும் போட்டுக் கொண்ட பிறகு இரு முறை தொற்றால் பாதிக்கப்பட்டார்.

தடுப்பூசி எடுத்துக்கொள்வதால் கொரோனா வராமல் இருக்கும் என்று கூற முடியாது என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். ஆனால், தொற்று ஏற்படுத்தும் பாதிப்பை தடுப்பூசி குறைக்க உதவும்.

மக்கள் தொகையில் மிக மிகக் குறைவானவர்களே தடுப்பூசி எடுத்துக் கொண்டுள்ளதாக இந்திய அரசு கூறுகிறது.

மும்பையில் உள்ள வீர் சாவர்கர் மருத்துவமனையில் பணியில் இருந்தார் மருத்துவர் ஸ்ருஷ்டி ஹெலரி. மும்பை மாநகராட்சியால் நடத்தப்பட்ட மீதாகர் கோவிட் மையத்தின் பொறுப்பு இவருக்கு வழங்கப்பட்டது.

“கடந்த மார்ச் 8ஆம் தேதி என் முதல் டோஸ் கொரோனா தடுப்பூசியை போட்டுக் கொண்டேன். இரண்டாவது டோஸ் எப்ரல் 29ஆம் தேதி எடுத்துக் கொண்டேன்” என்கிறார் ஸ்ருஷ்டி.

ஆனால், இரண்டாம் டோஸ் தடுப்பூசி போட்டுக் கொண்ட ஒரே மாதத்தில் அவருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டது.

“மே 29ஆம் திகதி எனக்கு கொரோனா பொசிட்டிவ் ஆனது. அது எனக்கு இரண்டாவது முறை. பிறகு ஜூலை 11ஆம் திகதி மூன்றாம் முறையாக கொரோனாவால் பாதிக்கப்பட்டேன்”

மகாராஷ்டிராவில் கொரோனா இரண்டாம் அலை கடந்த பெப்ரவரி மாதம் தொடங்கியது. ஏப்ரல் மே மாதங்களில் கொரோனாவின் டெல்டா திரிபு மிக வேகமாக பரவியது.

“நான் கொரோனாவின் புதிய திரிபால் பாதிக்கப்பட்டேன் என்று நினைக்கிறேன். வைரஸ் மிக வேகமாக திரிபு அடைகிறது” என்கிறார் ஸ்ருஷ்டி.

கடந்த மே மாதம் மருத்துவர் ஸ்ருஷ்டிக்கு கொரோனா அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன.

அந்த நேரத்தில்தான், வைரசின் பல புதிய திரிபுகள் பல இடங்களில் கண்டறியப்பட்டன. பின்னர் அவர் தனது மருத்துவரின் அறிவுரையின் பேரில் கொரோனா பரிசோதனை செய்து கொண்டார்.

“நான் இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் போட்டுக் கொண்டதால் எனக்கு கொரோனா பாதிப்பு வராது என்று நினைத்தேன். சாதாரண காய்ச்சலாக இருக்கும் என எண்ணினேன்” என்று ஸ்ருஷ்டி கூறுகிறார். அவருக்கு காய்ச்சலோடு லேசான சளியும் இருமலும் இருந்தது.

“எனக்கு இரண்டாவது முறை கொரோனா பொசிட்டிவ் என்று முடிவு வந்தபோது, பரிசோதனை முடிவில் ஏதேனும் தவறு நடந்திருக்கலாம் என நினைத்தேன்” என்று கூறிய ஸ்ருஷ்டிக்கு சில நாட்களில் வாசனையை உணர முடியாமல் போனது.

**மூன்றாவது முறை பாதிப்பு**

ஸ்ருஷ்டி ஒருவழியாக கொரோனாவில் இருந்து மீண்டு பணியில் சேர இருந்த நிலையில்தான் அவருக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது.

“என் குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே இரண்டு டோஸ் தடுப்பூசியை போட்டுக் கொண்டு விட்டனர். 21 நாட்களும் முடிந்தது. அதனால் உடலில் கொரோனாவுக்கு எதிரான அன்ரிபாடிகள் (நோய் எதிர்ப்பான்கள்) உருவாக தொடங்கியிருக்கும்.”

இந்நிலையில்தான் ஸ்ருஷ்டிக்கு மூன்றாவது முறையாக கொரோனா பாதிப்பு ஏற்பட்டது. இந்த முறை அவரது மொத்த குடும்பமும் தொற்று பாதிப்புக்கு ஆளாகியது.

“இந்த முறை எந்த தெளிவான அறிகுறிகளும் இல்லை. ஆனால், எனக்கு பல முறை தொற்று ஏற்பட்டதால், நான் மருத்துவமனையில் என்னை அனுமதித்துக் கொண்டேன். இந்த முறை கொரோனா மீண்டும் வராமல் இருக்க அனைத்து சிகிச்சைகளையும், அன்ரிவைரஸ் மாத்திரைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டாம் முறை ஏற்பட்ட கொரோனா வைரசின் மறுசெயல்பாடுதான் இது என்று நினைக்கிறேன்” என்கிறார் மருத்துவர் ஸ்ருஷ்டி.

முறையான சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் மீண்டும் தொற்று ஏற்படும் பாதிப்பு உள்ளது. அதனால்தான் ஸ்ருஷ்டி மருத்துவமனையில் தன்னை அனுமதித்துக் கொண்டார்.

**மூன்றாம் முறையாக தொற்று - அச்சமாக இருந்ததா?**

கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்ட பிறகு, இரு முறை கொரோனா பாதிப்பு ஏற்பட்டது, அச்சத்தை ஏற்படுத்தியதா என்று ஸ்ருஷ்டியிடம் கேட்டோம்.

அதற்கு பதிலளித்த அவர், “நானே கொரோனா விடுதியில் பணியாற்றி உள்ளேன். தீவிர கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துள்ளேன். எனக்கு எந்த பயமும் இல்லை. ஆனால், என் குடும்ப உறுப்பினர்களை நினைத்துத்தான் பதற்றமாக இருந்தேன். என் சகோதரருக்கு ஒட்சிசன் தேவைப்பட்டது” என்று கூறினார்.

எனினும், ஸ்ருஷ்டியின் குடும்பத்தினர் வெற்றிகரமாக கொரோனாவில் இருந்து மீண்டு விட்டனர்.

ஜூன் 2020இல் முதன் முதலில் ஸ்ருஷ்டி கொரோனாவால் பாதிக்கப்பட்டார். அவர் கொரோனா சிகிச்சைக்கான மருத்துவமனையில் பணியாற்றியபோது அவருக்கு பாதிப்பு ஏற்பட்டது. 13 மாத காலத்தில் அவர் மூன்று முறை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்.



இந்நிலையில் ஸ்ருஷ்டியின் மாதிரிகள் மரபணு வரிசை முறை ஆய்வுக்கு உட்படுத்தப்பட உள்ளன.

“என் மாதிரிகள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன. கொரோனாவின் புதிய திரிபால் பாதிப்பு ஏற்பட்டதா என்பது குறித்து ஆய்வு செய்யப்படும்” என்கிறார் ஸ்ருஷ்டி.

**“தடுப்பூசி போட்டதால் தப்பித்தோம்“**

மூன்று மாதங்கள் கோவிட் மையத்தில் பணியாற்றி, மூன்று முறை கொரோனாவில் இருந்து மீண்ட ஸ்ருஷ்டி, தற்போது படிப்பிற்கான விடுப்பில் உள்ளார்.

“நானும் என் குடும்பமும் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டதால் பாதுகாப்பாக மீண்டு வந்தோம். எங்கள் நுரையீரலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை” என்று அவர் தெரிவித்தார்.

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் சுவாசப் பிரச்னையை அதிகம் எதிர்கொள்கிறார்கள். சிலருக்கு நுரையீரல் முற்றிலுமாக பாதிக்கப்படுகிறது. ஆனால், ஸ்ருஷ்டியின் குடும்பத்தினர் இதுபோன்ற பிரச்னைகளை சந்திக்கவில்லை.

கொரோனா தடுப்பூசி நல்ல பலன் அளிப்பதாக கூறுகிறார் மருத்துவர் ஸ்ருஷ்டி

**தடுப்பூசி போட்டபின் கொரோனா தொற்று**

கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டதால் கொரோனா வராது என்று கூற இயலாது என்கின்றனர் வல்லுநர்கள்.

“தடுப்பூசி போட்டுக் கொண்ட பிறகு தொற்று ஏற்பட்ட பல நோயாளிகளை நான் பார்த்திருக்கிறேன். எந்த வயதினராக இருந்தாலும், அவர்களுக்கு கொரோனா வரலாம்” என்கிறார் மும்பையின் வாக்ஹர்ட் மருத்துவமனையின் மருத்துவ வல்லுநரான பெஹ்ரம் பார்டிவாலா.

எனினும் அவர்கள் மீது கொரோனா தொற்றின் தாக்கம் குறைவாக இருப்பதாக அவர் கூறுகிறார். குறைந்த அறிகுறிகளோடு, நோயாளிகள் விரைவில் குணமாகிறார்கள்.

இந்திய அரசின் தரவுகள் படி, இரண்டு டோஸ்கள் கோவேக்சின் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களில் 0.04 சதவீதம் பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. அதே போல இரண்டு டோஸ் கொவிஷீல்ட் போட்டுக் கொண்ட மக்களில் 0.03 சதவீதம் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. ●

பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்

# அன்டோனியோ பிளிங்டனின் இந்திய விஜயம் சீன – இந்திய விரிசலை தீவிரப்படுத்துவதற்கா?



உலகளாவியரீதியில் சீனாவின் எழுச்சி மேற்குலகு நாடுகளுக்கு சவாலானதொன்றாக மாறியுள்ளது. பொருளாதார இராணுவ தொழில்நுட்பரீதியில் முதன்மை நிலையை நோக்கி நகரும் சீனா தென்னாசியாவை பிரதான அரசியல் களமாக கையாண்டுவருகிறது. ஆசியாவில் இதர பகுதிகளை விட தென்னாசியவை இலக்கு வைத் திருப்பது இந்து சமுத்திரத்தை நோக்கி சீனாவின் கடலாதிக்கம் நிரம்பி வருவதும் முக்கியமான அரசியல் விடயமாக புலப் படுகிறது. அத்தகைய முக்கியத்துவம் இந்தியா சார்ந்ததாகவே உலகளாவிய ஆய்வு தளத்தில் முதன்மைப்படுத் தப்படுகிறது. அதற்கான காரணமும் அதற்கான முக் கியத்துவமும் புரிந்து கொள் ளப்படுதலே அவசியமாகும். அத்தகைய புரிதல் இந்திய-சீனா சார்ந்தது என்பதைக் காட்டிலும் இந்தியா - அமெரிக்கா சார்ந்ததாக விளங்கிக் கொள்ளப்படுதல் அவசிய மானதாகும். இக்கட்டுரையில் அமெரிக்க-இந்திய உறவு தென்னாசிய நோக்கிய சீனாவின் விரிவாக்கம் சார்ந்தும் அமையவுள்ளது.

அமெரிக்க வெளியுறவுச்செயலாளர் அன்டோனியோ பிளிங்டன் இரண்டு நாள் விஜயமாக 28.07.2021 அன்று இந்தியாவிற்கு வருகை தந்துள்ளார். அவரது வருகை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. அமெரிக்க-இந்திய உறவு பனிப் போருக்கு பிந்திய காலப்பகுதியில் ஏற்பட்ட போதும் நரேந்திர மோடி அரசானது ஆட்சிக்கு வந்த பின்னர் (2014) இருநாட்டுக்குமான நெருக்கம் அதிகரித்துள்ளது எனக்கருத முடியும். நரசிம்மராவ், வாஜ்பாய், மன்மோகன் சிங் போன்ற பிரதமர்கள் அமெரிக்காவுடனான உறவை முதன்மைப்படுத்தினாலும் சமதளத்தில் ரஷ்சியாவுடனும் ஏனைய ஆசிய நாடுகளுடனும் உறவை பேணி வந்தனர்.

ஆனால் பிரதமர் நரேந்திர மோடி 2016ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் மேற்கொண்ட பாதுகாப்பு உடன் படிக்கை அதன் நெருக்கத்தை மேலும் பலப்படுத்தி விட்டது. இதனால் இந்தியா சுயமாக முடிவெடுக்க முடியாமலும் தனது புவிசார் அரசியலை மட்டுமன்றி புவிசார் பொருளாதாரத்தையும் கட்டமைக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக சீனாவுடன் வர்த்தகரீதியிலான உறவை அதிகரிக்க திட்டமிடுகின்ற சந்தர்ப்பங்களில் அமெரிக்க-இந்திய உறவு மீள மீள புதுப்பிக்கப்படுவதாகவே தெரிகிறது. அதாவது சீனாவின் கொழும்பு துறைமுக நகர பிராந்தியத்துக்கான முதலீட்டில் இந்தியா தனித்து செயற்பட முடியாது ஜப்பான், அமெரிக்க கம்பனிகளோடு சேர்ந்த முதலீடு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்படுகிறது.

அவ்வாறே திருகோணமலை துறைமுகத்தை அண்டிய பகுதியில் 5 வருட குத்தகைக்கு அமெரிக்கா பெற்றுக்கொண்ட 33000 ஏக்கர் பரப்பில் இந்தியா அமெரிக்க, ஜப்பான் கம்பனிகளுடன் சேர்ந்தே முதலீடு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் கொல்லைப்புறத்தில் அமைந்துள்ள இலங்கையில் இந்தியா நேரடியாக முதலீடு செய்து கொள்ள முடியாத நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளது. இத்தகைய நெருக்கடிக்கு பின்னால் இந்திய அரசியல் தலைமைகளே காரணமாக தெரிகிறது. அமெரிக்கா இந்தியாவோடு நெருக்கமான உறவு கொள்வதென்பது அமெரிக்க நலனுக்கானதே அன்றி இந்தியாவின் வளர்ச்சிக்கானது அல்ல.

அமெரிக்க ஜனாதிபதி, அமெரிக்க வெளியுறவுச் செயலாளர், அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் போன்றவர்களின் தொடர்ச்சியான இந்தியா நோக்கிய பயணமானது, இந்தியாவை பிராந்திய ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் செழிப்பினை அடைந்து விடக்கூடாதென்ற கரிசனை கொண்ட நகர்வாகவே தெரிகிறது. ஒருபுறம் சீனாவின் நெருக்கடி மறுபுறம் அமெரிக்க மற்றும் மேற்குலகின் நட்பு கலந்த நெருக்கடி இந்தியாவின் அரசியல் பொருளாதார இராணுவ இருப்புக்கு சவாலானதாக அமைகிறது. இதனை சற்று விரிவாக நோக்குதல் அவசியமாகும்.

முதலாவது, அமெரிக்க வெளியுறவுச்செயலாளர் அன்டோனியோ பிளிங்டனின் விஜயம் பல நோக்கங்களை கொண்டு அமைந்தாலும் பிரதானமாக சீனாவிற்கும் இந்தியாவிற்குமிடையில் அண்மைக்காலமாக வளர்ந்து வரும் வர்த்தக உறவை தகர்ப்பதாகவே தெரிகிறது. கோவிட் தொற்று தொடர்பாக அமெரிக்கா இந்தியாவிற்கு வழங்கிய தடுப்பூசிகளின் போதாமை மட்டுமன்றி அதனை விற்பனை செய்ததாலும் இந்தியா பாரிய நெருக்கடியை உள்நாட்டில் எதிர்கொண்டுள்ளது. எனவே இதனை சரிசெய்ய சீனாவுடனான உரையாடலை இந்தியா மேற்கொண்டு விடக்கூடாது என்பதில் அமெரிக்கா கரிசனை கொண்டுள்ளது. குவாட் நாடுகள் கூடிய சந்திப்பொன்றில் அதேபோன்று ஜி-7 நாடுகளின் சந்திப்பிலும் வறிய நாடு களுக்கு தடுப்பூசி வழங்குவது தொடர்பான நடவடிக்கையை மேற்கொள்ள மேற்குலக நாடுகள் திட்டமிட்டுள்ளன. இது பெருமளவுக்கு சீனாவின் தடுப்பூசிக்கு எதிரான ஒரு அரசியலாகவே தெரிகிறது.

இரண்டாவது, குவாட் நாடுகளின் சந்திப்பொன்றை இந்த வருடத்தின் இறுதி மாதத்தில் மேற்கொள்ள வோசிங்டன் திட்டமிடுகிறது. குவாட் அமைப்பில் பிரதான அங்கம் பெறும் இந்தியா அதிலிருந்து விலகுவதோ அல்லது தனித்து செயற்படுவதோ குவாட் நாடுகளின் எதிர்காலத்துக்கு மட்டுமன்றி அமெரிக்காவின் இந்தோ-பசுபிக் நலன்களுக்கு ஆபத்தாக அமையுமென மேற்குலகம் கருதுகின்றது. இதனால் இந்து சமுத்திர பிராந்தியத்திலும் இந்தோ-பசுபிக் பிராந்தியத்திலும் சீனாவினுடைய ஆதிக்கத்தை சீனாவின் எல்லைக்குள் வைத்து இந்தியா மூலம் தோற்கடிக்க அமெரிக்கா முனைகின்றது.

மூன்றாவது, அமெரிக்காவின் இராணுவரீதியிலான ஒத்துழைப்பும் நெருக்கமும் இந்திய-சீன மோதலை உருவாக்கி இரு அரசுகளதும் பொருளாதாரத்தை சிதைவடைய செய்து மீளவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களை உத்தரவாதப்படுத்தும் முனைப்பாகவே தெரிகின்றது. மிகப்பிந்திய இராணுவரீதியிலான ஆயுத தளபாடங்கள், விமானங்கள், ஆளில்லா விமானங்கள், ஏவுகணைகள் மற்றும் தொழில்நுட்ப திறனுடைய குறுந்தூர ஆயுதங்கள் போன்றவற்றை இந்தியாவுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா 2020களில் பல உடன்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அத்தகைய ஆயுதங்கள் நேரடியான போர்களுக்கும் எல்லைப்போர்களுக்கும் பயன்படுத்தப்படுகின்ற வகைகள் என்பத குறிப்பிடக்கூடியதாகும்.

நான்காவது, இந்தியா தனது கடற்படை விரிவாக்கத்தை பலப்படுத்தல் நோக்கில் பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்சியா, தென்கொரியா, ஸ்பெயின் ஆகிய நாடுகளின் கம்பனிகளுடன் கடந்த 2020ஆம் ஆண்டு உடன்பாடு ஒன்றை எட்டியுள்ளது. இத்தகைய உடன்படிக்கை அமெரிக்காவின் பாதுகாப்பு உடன்படிக்கையிலிருந்து விலகிச்செல்வதாகும், இந்தியா அவ்வாறு செயற்பட முடியாததெனவும் அமெரிக்காவில் வெளிவரும் Foreign Policy என்ற இதழின் ஜூலைப் பதிப்பில் குறிப்பிட்டுள்ளது. இந்தியா அமெரிக்காவை விலகி பாதுகாப்பு நடவடிக்கைகளில் செயற்பட முடியாதென அவ்விதழ் குறிப்பிடுவதுடன் தென்னாசியாவிலும் குறிப்பாக இலங்கைக்குள்ளும் இந்தியா கடந்த காலத்தில் மேற்கொண்ட கொள்கைகளில் மாற்றங்கள் செய்ய வேண்டுமென குறிப்பிடுகின்றது.

ஐந்தாவது, சீனா தென்னாசிய பிராந்திய ரீதியில் இந்தியாவை போன்று பொருளாதார இராணுவ ஒத்துழைப்பை பலப்படுத்த திட்டமிடுகின்றது. அத்தகைய திட்டமிடலுக்குள் ஜூலை மாதத்தின் ஆரம்ப பகுதியில் பூட்டான் தவிர்ந்த ஏனைய தென்னாசிய நாடுகளுடன் இணைந்து வறுமை ஒழிப்பு மற்றும் ஒத்துழைப்பு மேம்பாட்டு மையம் ஒன்றை உருவாக்கி உள்ளது. (Poverty Alleviation and Cooperative Development Centre) இவ்அமைப்பு இந்தியாவால் உருவாக்கப்பட்ட BIMISTIஊர் மற்றும் ஐழுசு போன்றவற்றுக்கு நிகரானதாக அமைந்திருப்ப தோடு அமெரிக்காவின் தலைமையில் உருவாக்கப்பட் டுள்ள குவாட் அமைப்பையும் கடந்த ஏப்ரலில் குவாட் நாடுகளின் தலைமையில் இந்தியாவால் ஆரம்பிக்கப் பட்ட Supply Chain Resilience Imitative போன்றவற்றுக்கு எதிரானதாக உருவாக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் வளர்ச்சி நெருக்கடிக்கு உள்ளாக்குவதுடன் அதனூடாக இந்தியாவின் வளர்ச்சியை முறியடிப்பதும் சீனாவின் பிரதான உபாயமாக உள்ளது.

எனவே, இந்தியா நோக்கிய அமெரிக்க அணுகுமுறையும் சீனாவின் உபாயமும் ஒரே மாதிரியான விளைவை இந்தியாவுக்கு ஏற்படுத்தி வருகிறது. இந்தியா வரலாறு முழுவதும் ஜவர்ஹலால் நேரு வகுத்த அணிசேராமை என்பதனால் கட்டியெழுப்பப்பட்ட தோல்விகரமான கொள்கையை தொடர்வதாகவே தெரிகிறது. இத்தகைய நெருக்கடியை சரிசெய்ய முடியாத சூழலுக்குள் இந்தியா தள்ளப்பட்டுள்ளதுடன் இந்தியாவின் எதிர்காலம் அமெரிக்க சீனா இழுபறிக்குள் மீள முடியாத ஒன்றாக அமைய வாய்ப்புள்ளது. கொள்கை வகுப்பாளர்களும் ஆட்சியாளர்களும் விடுகின்ற தவறுகளால் இந்திய தேசத்தினுடைய வலிமை காணாமல் போயுள்ளது.

சீனாவை எதிர்கொள்ள அமெரிக்காவுடனும் அமெரிக்காவை எதிர்கொள்ள இன்னுமொரு நாட்டிடமோ இந்தியா சரணடைய வேண்டிய கொள்கைகளையே பின்பற்றி வருகின்றது. அன்டோனியோ பிளிங்டனின் இந்திய விஜயம் அமெரிக்க-இந்திய நெருக்கத்தை ஏற்படுத்துவதிலும் சீன-இந்திய விரிசலை பலப்படுத்துவதாகவே அமையும். இது இந்தியாவின் புவிசார் அரசியலையும் பொருளாதாரத் தையும் ஆபத்தான நிலைக்குள் தள்ள வாய்ப் புள்ளது.

> **சீனாவை எதிர்கொள்ள அமெரிக்காவுடனும் அமெரிக்காவை எதிர்கொள்ள இன்னுமொரு நாட்டிடமோ இந்தியா சரணடைய வேண்டிய கொள்கைகளையே பின்பற்றி வருகின்றது. அன்டோனியோ பிளிங்டனின் இந்திய விஜயம் அமெரிக்க - இந்திய நெருக்கத்தை ஏற்படுத்துவதிலும் சீன-இந்திய விரிசலை பலப்படுத்துவதாகவே அமையும்.**

- நன்றி: அருவி

# தோண்ட தோண்ட கிடைக்கும் பழந்தமிழர்களின் பொருள்கள்

முரளிதரன் காசிவிஸ்வநாதன்




தமிழ்நாட்டின் பல இடங்களில் மாநில தொல்லியல் துறை ஆய்வுகளை செய்துவருகிறது. நீண்ட வாள், வெள்ளிக்காசு, முதுமக்கள் தாழி என புதைந்துகிடந்த வரலாற்றின் எச்சங்கள் மாநிலத்தின் பல இடங்களிலிருந்தும் மேலெழ ஆரம்பித்துள்ளன.

2015ஆம் ஆண்டில் மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நடந்த அகழாய்வில் பெரும் கட்டடத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, தமிழ்நாட்டின் தொல்லியல் வரலாறு மற்றும் அகழாய்வுப் பணிகள் மீதான ஆர்வம் வெகுவாக அதிகரித்தது. ஆனால், கீழடி அகழாய்வை நடத்திவந்த இந்தியத் தொல்லியல் துறை, மூன்றாம் கட்ட அகழாய்வுகளுக்குப் பிறகு, தமிழ்நாட்டில் வேறு அகழாய்வுகளை நடத்தவில்லை. நடத்தப்பட்ட அகழாய்வின் முடிவுகளையும் வெளியிடவில்லை.

இதற்குப் பிறகு எழுந்த கோரிக்கைகளால், நான்காம், ஐந்தாம், ஆறாம் கட்ட அகழாய்வுகளை மாநிலத் தொல்லியல் துறையே நடத்தி முடித்தது. இதற்குப் பின் கீழடியில் ஏழாம் கட்ட அகழாய்வை நடத்த முடிவுசெய்தபோது, கீழடி மட்டு மல்லாமல் ஆதிச்சநல்லூர், சிவகளை உள்ளிட்ட தமிழ்நாட்டின் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த வேறு பல இடங்களிலும் அகழாய்வுகளை நடத்த மாநில தொல்லியல் துறை முடிவெடுத்தது.

கடந்த ஆண்டே கீழடி மட்டுமல்லாமல், அதன் அருகில் உள்ள சில ஊர்களிலும் அகழாய்வு நடத்தப்பட்டது. அதன்படி கீழடி தொகுப்பு (கீழடி, அகரம், கொந்தகை, மணலூர்), ஆதிச்சநல்லூர், கொற்கை, கங்கை கொண்ட சோழபுரம், கொடுமணல், மயிலாடும்பாறை ஆகிய ஏழு இடங்களில் அகழாய்வுப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. மார்ச் மாதத்தில் தொடங்கிய அகழாய்வு கொரோனா ஊரடங்கு காரணமாக மே 10ஆம் கிகதி நிறுத்தப்பட்டது.

ஊரடங்கு காலகட்டம் முடிந்த பிறகு, ஜூன் மாத இறுதியில் இருந்து மீண்டும் அகழாய்வுப் பணிகள் நடந்துவருகின்றன. மழைக் காலம் துவங்குவதற்கு முன்பாக அகழாய்வுப் பணிகள் நிறைவடைய வேண்டும் என்பதால் தற்போது பணிகள் தீவிரமடைந்துள்ளன.

கீழடியைப் பொறுத்தவரை தொடர்ந்து தொல்லியல் பொருட்கள் கிடைத்துவரும் பகுதியாக இருந்து வருகிறது. 2019 -2020 இல் நடந்த அகழாய்வில் 25க்கும் மேற்பட்ட தாழிகள் உட்பட பல தொல்லியல் பொருட்களும் கலைப் பொருட்களும் கிடைத்தன.

**கீழடிக்கு அருகில் உள்ள அகரத்தில் கிடைத்த மட்பாண்டங்கள்**

இந்த முறை நடந்த அகழாய்வில் பல மணிகள், பானை ஓடுகள், கூரை ஓடுகள் போன்றவை கிடைத்திருக்கின்றன. இங்குள்ள தரைகள் செங்கல் கற்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இரு கற்களை இணைக்க களிமண்ணும் சுண் ணாம்பும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அகரம் தளத்தில் நடந்த அகழாய் வில் சில நாட்களுக்கு முன்பாக சுடு மண்ணால் ஆன அடையாளம் தெரியாத ஒரு விலங்கின் உடல் பாகத்தின் உருவ பொம்மை கிடைத்தது. பத்து சென்ரிமீற்றர் அலகமும் நான்கு சென்டி மீற்றர் உயரமும் கொண்ட அந்த பொம்மை எந்த விலங்கைக் குறிக்கிறது என்பது தெளிவாக தெரியவில்லை. மேலும் இதே அகரம் பகுதியில் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரராயன் காசுகளும் கிடைத்தன.

இந்த ஏழாம் கட்ட அகழாய்வில் அகரத்தில் மட்டும் விலங்கு உருவ பொம்மை, சுடுமண்ணால் ஆன பெண் முகம், செம்பு நாணயங்கள், புகைப் போக்கி குழாய் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைத்துள்ளன. கண்ணாடி, யானை தந்தம், சங்கு ஆகியவற்றால் ஆண அணிகலன்களும் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன.

**ஆதிச்சநல்லூர்**

ஆதிச்சநல்லூரில் அலெக்ஸாண்டர் ரீ ஆய்வு நடத்திய புதைமேடு சுமார் 114 ஏக்கர் பரப்பளவு டையது. அந்தப் பகுதி தற் போது பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு ஆய்வுகள் நடத்த அனுமதியில்லை. ஆகவே அதற்கு அருகில் உள்ள பகுதியில் ஆய்வு நடத்த மாநில தொல்லியல் துறை அனுமதி பெற்றுள்ளது.

ஆதிச்சநல்லூர் புதைமேடு என்பது இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடமாகப் பயன்படுத்தப்பட்டுவந்த பகுதி. இதற்கு அருகில் மக்கள் வசித்த இடமாக கருதக்கூடிய பகுதியில் ஆய்வை நடத்த தொல்லியல் துறை விரும்பியது. அதில் பெரும்பகுதியில் மத்திய கால ஏரி ஒன்று இருக்கிறது. ஆகவே அருகில் உள்ள கிராமத்தில் அகழாய்வு நடந்துவருகிறது.

இங்கு இரண்டு மீற்றர் ஆழத்தில் பல பானை ஓடுகள் கிடைக்க ஆரம்பித்துள்ளன. ஆனால், அருகிலேயே ஏரி உள்ளதால், அகழாய்வுப் பள்ளங்களில் தெளிவாக பண்பாட்டு அடுக்குகளை அடையாளம் காண்பதில் சிரமம் இருக்கிறது. ஆதிச்சநல்லூரில் வாள், வேறு சில இரும்புப் பொருட்கள் கிடைத்தாலும் அலெக்ஸாண்டர் ரீயின் ஆய்வில் கிடைத்த அளவுக்கு பொருட்கள் கிடைக்கவில்லை.

**சிவகளை**

ஆதிச்சநல்லூருக்கு அருகில் உள்ள சிவகளையும் ஈமத் தாழிகள் புதைக்கப்பட்ட இடம்தான். இதுவும் ஆதிச்சநல்லூரும் தொடக்க இரும்பு காலத்தை அதாவது கி.மு. 8 முதல் கி.மு. 9 வரையிலான



காலகட்டத்தைச் சேர்ந்தவை. ஆதிச்சநல்லூரையும் சிவகளையையும் ஒரே நிலப்பகுதியாகவும் கருத முடியும். இந்த சிவகளை புதைமேடு கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கருக்குப் பரந்து கிடக்கிறது. இந்த அளவுக்கு மிகப் பெரிய புதைமேடு இருக்கிறதென்றால், அதற்கு அருகில் உள்ள பராக்கிரமபாண் டிய புரம், மூலக்கரை போன்ற பகுதி களில் மனிதர்கள் வாழ்ந்த இடங்கள் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

சிவகளையில் சிவகளைப் பரம்பு, பேட்மாநகரம், ஸ்ரீ மூலக்கரை ஆகிய இடங்களில் 15க்கும் மேற்பட்ட ஆய்வுக் குழிகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், ஒரே குழியில் 16 முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் 5 தாழிகள் மூடியுடன் கண்டெடுக்கப்பட்டன. ஒட்டுமொத்தமாக இதுவரை சுமார் 40க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவை தவிர, நூல் நூற்க உதவும் தக்கிளி, புகைப்பான், கருப்பு - சிவப்பு மண்பாண்டங்கள், பழங்கால மற்றும் இடைக்கால கருவிகள், எலும்புகள், நடுகற்கள் உள்ளிட்டவையும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆதிச்சநல்லூரைப் போலவே இங்கும் மூன்று பண்பாட்டு அடுக்குகள் காணப்படுகிறன. இங்கு கிடைத்த ஈமத் தாழிகளில் கிடைத்த பொருட்களை ஓ.எஸ்.எல், டி.எல் டேட்டிங் செய்து பார்க்கும்போது ஒவ்வொரு பண்பாட்டு அடுக்கின் காலமும் தெளிவாகத் தெரியவருமெனத் தொல்லியல் துறை நம்புகிறது.

**கொற்கை**

பாண்டிய நாட்டின் துறைமுக நகரமாக இருந்ததாகக் கருதப்படும் கொற்கையில் 1968இல் முதல்முதலாக ஆய்வு நடத்தப்பட்டது. தமிழ்நாடு மாநில தொல்லியல் துறை 1961இல் உருவாக்கப்பட்ட நிலையில் அந்தத் துறையின் சார்பில் முதல்முதலில் நடந்த அகழாய்வே இங்குதான் நடத்தப்பட்டது. இங்கு கிடைத்த பொருட்களை வைத்து, இந்த இடத்தின் காலம் என்பது கி.மு. 785 என கணிக்கப்பட்டிருக்கிறது. இடைச் சங்ககால பாண்டியர்களின் துறைமுக நகரமாக கொற்கை இருந்ததாகக் கருதப்படுகிறது. இங்கு இப்போது நடத்தப்பட்டு வரும் அகழாய்வில், பல பானை ஓடுகள் கிடைத்திருக்கின்றன. மேலும் கடந்த வாரம் துளையிடப்பட்ட குழாய்கள் ஒன்பது அடுக்குகளாகக் கிடைத்திருக்கின்றன. இதற்குள் உள்ள பொருட்களை ஆய்வுசெய்த பிறகு, இவை எதற்காகப் பயன்படுத்தப்பட்டன என்பது தெரியவரக்கூடும்.

**கங்கை கொண்ட சோழபுரம்**

கங்கை கண்ட சோழபுரத்தில் முதலாம் ராஜேந்திரச் சோழனின் அரண்மனை அமைந்திருந்ததாகக் கருதப்படும் மாளிகை மேடு பகுதியில் தற்போது அகழாய்வு நடத்தப்பட்டுவரு கிறது. இங்கு ஏற்கனவே நடந்த அகழாய்வில் சோழர் காலத்து அரண்மனையின் அடிப்பகுதியின் ஒரு பகுதி வெளிப்பட்டது. தற்போது, அரண்மனையின் அமைப்பைப் புரிந்துகொள்ளும் வகையில் ஏதாவது ஒரு பகுதியின் முழுமையையும் வெளிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இங்கு ஆங்கில எழுத்தான “T“ வடிவில் ஒரு பெரிய சுவர் கிடைத்துள்ளது.

மிகப் பெரிய ஆணிகளும் கிடைத்துள்ளன. ”இந்த அளவுக்கு ஆணி பெரிதாக இருக்கிறதென்றால், அங்கு இருந்திருக்கக்கூடிய கதவு போன்ற மரப் பொருட்களின் உயரத்தையும் அகலத்தையும் புரிந்துகொள்ளலாம்” என்கிறார் மாநிலத் தொல்லியல் துறையின் துணை இயக்குனரான ஆர். சிவானந்தம். இங்குள்ள அரண்மனை இரட்டைச் சுவர்களால் கட்டப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

இந்த மாளிகை சுமார் ஒன்றரைக் கி.மீ. பரப்பளவுக்கு இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. கங்கைகொண்ட சோழபுரம் கோவிலில் இருந்து 500 மீட்டர் தொலைவில் இந்த மாளிகையின் மதில் சுவர் காணப்படுகிறது. ஏற்கனவே 2008ல் இங்கு நடந்த அகழாய்வில் இந்த மதில் சுவர் கண்டுபிடிக்கப்பட்டது. இவை தவிர, கொக்கிகள், சீன நாட்டுப் பானை ஓடுகள் போன்றவையும் கிடைத்திருக்கின்றன. டெரகோட்டா உருவங்களும் கிடைத்திருக்கின்றன.

**கொடுமணல்**

கொடுமணல் அகழாய்வைப் பொறுத்தவரை, இங்கு பல முறை தஞ்சாவூர் பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், இந்தியத் தொல்லியல் துறை, மாநிலத் தொல்லியல் துறை போன்றவை அகழாய்வுகளைச் செய்திருக்கின்றன. சுமார் 12 முறை இங்கு அகழாய்வு செய்யப்பட்டிருக்கிறது. இங்கு இதுவரை கிடைத்துள்ள பொருட்கள் எல்லாமே ஒரே காலகட்டத்தைச் சுட்டிக்காட்டுபவையாகவே இருக்கின்றன.

இங்கு இரண்டு விதமான தலங்கள் இருக்கின்றன. ஒன்று ஈமத் தலம். மற்றொன்று தொழில் நடைபெற்ற இடம். இங்கு பெரும்பாலும் மணிகள் செய்யப்பட்ட இடங்கள் அதிகம் கிடைத்திருக்கின்றன. இங்கு மணிகள் அறுக்கும் தொழிற்சாலைகளுக்கான உலைகள், காசுகள் போன்றவை கிடைத்திருக்கின்றன. ஒரு கிணறும் அதற்கு அருகில் இரண்டு பக்கமும் படிகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த இடத்தைப் பொறுத்தவரை கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டுவரை சேர்ந்ததாக இருக்கலாம் என்கிறார் சிவானந்தம்.

கிருஷ்ணகிரியில் உள்ள மயிலாடும்பாறையைப் பொறுத்தவரை, அந்தப் பகுதி புதிய கற்காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. அடுத்ததாகப் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த பொருட்களும் இங்கு கிடைத்துள்ளன. குறிப்பாக மிக நீளமான வாள் ஒன்று கிடைத்துள்ளது. இங்கு கிடைத்துள்ள பானைகள் பெரும்பாலும் சக்கரங்களைக் கொண்டு வனையாமல், கையால் வனையப்பட்டவையாக உள்ளன.

இந்த அகழாய்வு முடிந்த பிறகு, ஏற்கனவே நடந்த அகழாய்வின் முடிவுகளை ாக இடங்களைக் கண்டறிந்து அகழாய்வு நடத்த முடிவுசெய்திருப்பதாக மாநில தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்திருக்கிறார். ■

- பிபிசி தமிழ்

# புலமைச் சிகரம்




**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 45 நிமிடம்

கல்வி tv CHANNEL

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?
1)  2)  3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில் எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்




33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடியாக நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ........................................................................................................
........................................................................................................

2. ........................................................................................................
........................................................................................................

3. ........................................................................................................
........................................................................................................

**(6 புள்ளிகள்)**

ஈழநாடு

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 93 பேர் கைது!



கொழும்பு, ஒகஸ்ட் 01

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 93 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதன்படி, தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இதுவரை 52 ஆயிரத்து 719 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பயணக் கட்டுப்பாடுகளை மீறி மாகாண எல்லைகளைக் கடக்க முயன்ற 284 நபர்கள் நேற்றுமுன்தினம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (இ)

# பிரபல சிங்கள நடிகை விபத்தில் சிக்கி மரணம்



கொழும்பு, ஒகஸ்ட் 01

நுவரெலியா - தலவாக்கலை வீதியில் லிந்துலை பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பிரபல சிங்கள நடிகை ஹயாசிந்த் விஜேரத்ன உயிரிழந்துள்ளார்.

அவர் பயணித்த வாகனம் நேற்றுமுன்தினம் இரவு பள்ளம் ஒன்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# ஹிஷாலினியின் மர்ம மரணத்துக்கு நீதி கோரி வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஒகஸ்ட் 01

**பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணி புரிந்த சிறுமி ஹிஷாலினியின் மர்ம மரணத்துக்கு நீதி கோரி வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டம் மகளிர் அமைப்பினரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, "நாட்டில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளன. கொழும்பில் மரணமடைந்த ஹிஷாலினியின் மரணத்துக்குக் காரணமானவர்கள் உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு, உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

மேலும், சிறுமிகள், பெண்கள் மீதான, துஷ்பிரயோக சம்பவங்கள் நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், நாட்டின் பெண்களுக்கான பாதுகாப்பு கேள்விக் குறியாகவுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

"ஹிஷாலினியின் மரணத்துக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு



தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். எமது நாட்டின் பெண்கள் சுய கௌரவத்துடன் பாதுகாப்பாகவாழும்சூழ்நிலையை அரசு பெற்றுக் கொடுக்க வேண்டும்" என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில் இவ்வாறான துஷ்பிரயோக சம்பவங்கள் தடுக்கப்பட்ட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (இ)

# தாதியர் கல்லூரிக்குள் பரவியது கொரோனா

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 01

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் 25 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இலங்கையின் பல மாவட்டங்களையும் சேர்ந்த மாணவர்கள் பயிற்சி பெறும் நிலையிலேயே 25 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து பயிற்சிக் கல்லூரியின் அனைத்து நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் அனைவரும் ஏற்கனவே இரண்டு கட்டத் தடுப்பூசிகளையும் ஏற்றிய பின்பும் 25 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (இ - 03)

# பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டால் பொதுப்போக்குவரத்து வழமைக்கு

## இராஜாங்க அமைச்சர் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு, ஒகஸ்ட் 01

"மாகாணங்களுக்கு இடையில் தற்போது அமுலாகியுள்ள பயணக் கட்டுப்பாடுகள் நாளை திங்கட்கிழமை முதல் தளர்த்தப்படுமாயின்அன்றிலிருந்து பொதுப்போக்குவரத்து சேவைகள் வழமைபோல் இடம்பெறும்."

- இவ்வாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாளை திங்கட்கிழமை முதல்



மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவுள்ளன என்று தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறெனில் பொதுப்போக்கு வரத்தை வழமைக்குக்கொண்டுவரமுடியும்.

அதேநேரம், சகல அரச சேவையாளர்களும் நாளை திங்கட்கிழமை வழமைபோல் பணிகளுக்குத் திரும்பவுள்ளதால், நெரிசல் நிலையைக் குறைப்பதற்கு பொதுப்போக்குவரத்தை வழமைபோல் இயங்கச் செய்ய வேண்டிய தேவையுள்ளது.

அந்தவகையில், சுகாதார நடைமுறைகளுடன் பொதுப்போக்குவரத்து சேவைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்" -என்றார். (இ)

# யாழில் கொரோனோவால் இதுவரை 127 பேர் மரணம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 01

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்., சந்திரமாதா கோயிலடியைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 127ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

# ஹிஷாலினியின் மரணத்தை அரசியலாக்காது அதனை ஒரு பாடமாக எடுத்து எதிர்காலத்தில் செயற்படவேண்டும்

## ஹட்டன் ஊடக சந்திப்பில் பிரிடோ நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

ஹட்டன், ஒகஸ்ட் 01

"ஹிஷாலினியின் மரணத்துக்கும் குற்றச் செயல்களுக்கும் காரணமானவர்களை இனங்கண்டு அதற்குத் தகுந்த தண்டனை வழங்க வேண்டும். ஆனால், அரசியலாக்கக் கூடாது. இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்க இதனைப் பாடமாகக் கொண்டு செயற்பட வேண்டும்."

- இவ்வாறு பிரிடோ நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளரும் சமூக சேவையாளருமான எஸ்.கே.சந்திரசேகரன் தெரிவித்தார்.

ஹட்டனில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-


"மலையகப் பகுதியில் நடைபெற்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவல்ல. இதற்கு முன்னும் இவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால், அவ்வப்போது போராட்டங்களை நடத்தி விட்டு அதனை மறந்து விடுகிறார்கள். இந்நிலை மாற வேண்டும். மலையகத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் தங்களது பிள்ளைகளை வீட்டு வேலைக்கு அனுப்பக்கூடாது என்று தோன்றும் அளவுக்கு அவர்களை விழிப்புணர்வு செய்ய வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரச சேவைகள் தோட்டப் பகுதிகளுக்குச் செல்வது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. இதனால் தான் கடந்த காலங்களில் பிரதேச செயலகங்கள் அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருந்தன.

ஆனால், தற்போது அவை வலுவிழந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

அவை அதிகரிக்கப்பட்டிருந்தால் அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர்கள், சிறுவர் அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர்கள் எனப் பலர் அதிகரிக்கப்படுவார்கள். இப்போது தோட்டங்களில் இவர்கள் சேவையை முன்னெடுக்க வாய்ப்பு ஏற்படும் அப்போது சிறுவர்களுக்கு பாதுகாப்பும் அவர்களுக்கு உரிமையை அனுபவிக்கின்ற சூழலும் ஏற்படும்.

இதனைத் தவிர கொழும்புக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ வேலைக்குச் செல்லும்போது அவர்களைத்தொழில்திணைக்களத்தில் பதிவு செய்யக்கூடிய நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். அப்போது இவர்களுக்கும் வேலை வழங்குநருக்கும் பாதுகாப்பு ஏற்படுவதுடன் தொழில் அங்கீகாரமும் கிடைக்கும். இதனைத் தவிர அரசியல் அமைப்புக்கள் அல்லது ஏனைய அமைப்புக்கள் தங்களது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் போது இது ஒரு முக்கியமான விடயமாகக் கருதி முதன்மைத்துவப்படுத்தி இதற்கு முக்கியத்துவமளித்துச் செயற்படுவதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்" - என்றார். (இ)




# அரசுக்கு எதிராக எழுப்பப்படும் குரலில் பார்வையாளராகவே பங்குபற்றும் மக்கள்!

## ‘வேண்டும் வேண்டும், விவாதம் வேண்டும்’ பாராளுமன்றத்தை ஆக்கிரமித்த தமிழ் கோஷம்




இந்திய பாராளுமன்றத்தில் சமீபத்தில் பல கசப்பான விவாதங்களுக்கிடையில் ஓர் இனிமையான நிகழ்வு நடந்திருக்கிறது. தமிழிலும் மற்றும் பிராந்திய மொழிகளிலும் எதிர்க்கட்சிகள் கோஷங்கள் எழுப்புவது புதிதல்ல. மொத்தமாக ஹிந்தியில் நடக்கும் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில், அது செவிக்கு ஒரு சுவாரஸ்யமான, இனிமையான ஆறுதலைத் தரும் என்றும் நினைக்கலாம். ஆனால் இம்முறை, பல எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் மோடி அரசாங்கத்துக்கு எதிராக, தமிழில் கோஷங்களை எழுப்பினர். ”வேண்டும் வேண்டும், விவாதம் வேண்டும் வேண்டும் வேண்டும், நீதி வேண்டும்” என்று அவர்கள் இட்ட கோஷங்களால் பாராளுமன்றம் முடங்கிப்போனது.

ஜூலை 27ஆம் தேதி செவ்வாய்க் கிழமை, பஞ்சாபைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜஸ்பீர் சிங், “வேண்டும் வேண்டும்'' என்று குரல் எழுப்ப, மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ”நீதி வேண்டும்”, ”விவாதம் வேண்டும்” என்று தொடர் கோஷங்களை எழுப்பினர்.

காங்கிரஸின் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷின் ட்விட்டர் பதிவு அந்த நிகழ்வை நன்றாக விவரித்திருந்தது. ”பொதுவாக, பாராளுமன்றத்தில் எழுப்பப்படும் கோஷங்கள் ஹிந்தியிலோ ஆங்கிலத்திலோ இருக்கும். ஆனால், முதன்முறையாக ராஜ்ய சபா தமிழில் உரக்கக் குரலெழுப்புகிறது. ‘வேண்டும் வேண்டும் விவாதம் வேண்டும்’ என, மொத்த எதிர்க்கட்சித் தரப்பும் கோரிக்கை வைத்தது. அரசு வலுக்கட்டாயமாக மசோதாக்களை நிறைவேற்றிவருவதால் இந்தக் கோஷம் எழுந்துள்ளது” என்கிறார்.

அடுத்த நாள், துணை சபாநாயகர் ஹரிவன்ஷ் பலமுறை நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்தபோதும், கர்நாடகாவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தாய்மொழியில் கோஷங்களை எழுப்பினர்: ‘பேகு பேகு, நியாயா பேகு’ (நீதி வேண்டும்). த்ரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர்கள் “ஆட்டம் தொடங்கட்டும்” என்ற பொருள்பட “ஹெலா ஹோபே” என்று வங்காளத்தில் முழக்கமிட்டனர். எதிர்க்கட்சியான பா. ஜ. க. வுக்கு எதிரான ஆட்டம் தொடங்கிவிட்டது என்று அறிவுறுத்தும்படியாக, த்ரிணாமுல் காங்கிரஸ் மேற்கு வங்கத் தேர்ந்தலின்போது முன்னெடுத்த கால்பந்து விளையாட்டு முழக்கம் இது. “ஹெலா ஹோபே” என்பது த்ரிணாமூல் காங்கிரஸூக்கு ஓர் அரசியல் முழக்கமாகவே ஆகிவிட்டது. த்ரிணாமூல் காங்கிரஸின் தலைவர் மம்தா பனர்ஜி சமீபத்தில் டெல்லிக்குச் சென்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உட்பட பல எதிர்கட்சித் தலைவர்களை சந்தித் திருக்கிறார். 2024இல் நரேந்திர மோடியை எதிர் கொள்ள ராகுல் காந்தியை விட, தானே பொருத்தமான தலை வராக இருப்பதாக ஒரு பிம்பத்தைக் கட்ட மைக்கும் முயற்சி இது என்ற வலுவான சந்தேகம் எழுந்துள்ளது.

விவசாய சட்டங்கள் மற்றும் பெகாஸஸ் ஒட்டுக்கேட்பு விவகாரம் தொடர்பாக அரசு ஒரு விரிவான விவாதத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு எதிர்க் கட்சிகள் பாராளுமன்ற நடைமுறைகளில் குறுக்கிட்டன. பெகாஸஸ் உளவு மென் பொருளை வைத்து இந்தியாவின் பல கட்சித் தலைவர்களும் பத்திரிகையாளர்களும் ஒட்டுகேட்கப்பட்டுள்ளனர் என்ற குற்றச் சாட்டு எழுந்துள்ளது. தங்களது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை வேறு எதையும்பற்றி விவாதிக்க அநுமதிக்கமாட்டோம் என்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

பெகாஸஸ் ஒட்டுக்கேட்பு விவகாரம் உலகம் முழுவதும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது. இஸ்ரேலிய கண்காணிப்பு அமைப்பான என்.எஸ்.ஓ உருவாக்கிய பெகாஸஸ் மென்பொருள், பல அரசாங்க அமைப்புகளால் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், இதைப் பயன்படுத்தி அரசியல் எதிரிகள், பத்திரிகையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் தொலைபேசிகளுக்குள் இரகசியமாக நுழைந்து நோட்டம் பார்த்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. ஓமெர் கபீர் என்கிற இஸ்ரேலிய பத்திரிகையாளர் தெரிவித்த முதல் குற்றச்சாட்டுக்குப் பிறகு, ‘வாஷிங்க்டன் போஸ்ட்’ உட்பட பல பத்திரிகைகள் இதுபற்றி எழுதி, அரசியல் தளங்களிலும் ஊடகங்களிலும் பரபரப்பை உருவாக்கின.

தீவிரவாத அமைப்புகள், போதைப்பொருள் கடத்தல் அமைப்புகள், பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்தும் சட்டவிரோத அமைப்புகளின் குற்றங்களைக் கண்காணிப்பதற்காக அரசுகளுக்கு மட்டுமே பெகாஸஸ் விற்கப்படுகிறது என்பதை ‘ஈழநாடு’ வாசகர்கள் அறிந்திருப்பார்கள். ஆனால், என்.எஸ்.ஓவின் சில வாடிக்கையாளர்கள், தங்களுடைய அரசியல் எதிரிகள், பத்திரிகையாளர்கள், உரிமை செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கு எதிராகவும் பெகாசஸைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. ”மூன்று ஜனாதிபதிகள், பத்து பிரதம மந்திரி கள், ஓர் அரசர் உட்பட“ 14 தலைவர் கள் உளவறியப்பட்டிருக்கிறார்கள் என்கிறது வாஷிங்டன் போஸ்ட்.

இந்தப் பட்டியலில் ராகுல் காந்தியும் உள்ளார். என்.எஸ்.ஓவின் வாடிக்கையாளரான ஏதோ ஓர் இந்திய அரசு நிறுவனம் 2018இல் அவரது தொலைபேசி எண்ணை சேர்த்திருப்பதாகத் தெரியவந்துள்ளது. 2019இல் நடைபெறவிருந்த பாராளுமன்றத் தேர்தலில் அவர் நரேந்திர மோடிக்கு எதிராகக் களம் இறங்கு வதற்கு முன்னால் இது நடந்திருக்கிறது. அவரது நெருங் கிய ஆலோசகர்களின் எண்களும் இந்தப் பட்டியலில் உண்டு. சுதந்திரமான ஊடகங்களும் எதிர்க்கட்சிகளும் ஏன் இத்தனை ஆத்திரத்தோடு பெகாசஸ் விவகாரத்தைக் கையில் எடுத்திருக்கின்றன என்பது இப்போது புரியும்.

சில இடங்களில் நடக்கும் அடக்குமுறை ஆட்சி அமைப்புகள் விதிவிலக்குகளாக இருந்தாலும், சமகால மனித வரலாற்றிலேயே மிகவும் சுதந்திரமான நூற்றாண்டு இது என்றே சொல்லலாம். இந்த சுதந்திரம் ஜனநாயக அமைப்புகளால் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. நேர்மையான ஊடகங்களையும் எதிரிகளையும் உளவுபார்க்கும் ஆட்சி அதிகாரத்தின் மோசமான செயல்பாடுகளால் அது குலைக்கப்படக் கூடாது. பெகாசஸ் மென்பொருள் தவறாகப் பயன்படுத்தப் பட்டது பற்றி எதிர்க்கட்சிகள் ஒரு விவாதத்தை எதிர் பார்க்கின்றன. ஆனால், அரசுத்தரப்போ இது ஒரு பிரச் னையே இல்லை என்றும், எதிர்க்கட்சிகள் இதை ஊதிப் பெரிதாக்குகின்றன என்றும் சொல்லி அதை நிராகரிக் கிறது. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பாராளு மன்ற கமிட்டியின் தலைவரான காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் சஷி தரூர், வெள்ளிக்கிழமையன்று இது பற்றிய ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந் தார். ஆனால், இந்த அமைப்பை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக சஷி தரூர் பயன் படுத்துகிறார் என்று குற்றம் சாட்டிய பா.ஜ.க. உறுப்பினர்கள் கூட்டத்தைப் புறக்கணித்தனர். அதனால் கூட்டம் இரத்தானது. உள்துறை செயலாளர், தகவல் தொழில்நுட்பத்துறை செயலாளர், தொலைதொடர்புத்துறை செயலாளர் ஆகிய மூன்று மூத்த உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்துக்கு வரமுடி யாது என்று தெரிவித்தனர்.


- பகவான் சிங் - தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

பாராளுமன்ற அவமதிப்புக்காக இவர்கள்மீது சபாநாய கர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சஷி தரூர் கோரிக்கை வைக்கிறார். ஆனால், இது நடக்கப்போவதில்லை.

‘இந்து’ பத்திரிகைக் குழுமத்தைச் சேர்ந்த என். ராம், ஆசிய பத்திரிகைக் கல்விக் குழுமத்தைச் சேர்ந்த சசிகுமார் ஆகியோர், உச்ச நீதிமன்றத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அல்லது பணியிலிருக்கும் நீதிபதி ஒருவரின் தலைமையில் பெகாசஸ் விவகாரம் விரிவாக ஆராய்ப்படவேண்டும் என்ற கோரிக்கையோடு, பொதுநல வழக்கு ஒன்றைத் தொடர்ந்திருக்கிறார்கள். அடுத்த வாரம் அது உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது.

இந்த சர்ச்சைக்கு நடுவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜனநாயக விரும்பிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியும் கிடைத்திருக்கிறது. பத்திரிகையாளர்கள், தொலைக் காட்சிகளுக்கு எதிராகப் போடப்பட்ட கிட்டத்தட்ட 90 மானநஷ்ட வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவித்திருக்கிறார். 2012 முதல் பெப்ரவரி 2021 வரையிலான அ. இ. அ. தி. மு. க. ஆட்சிக்காலத்தில் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகள் இவை. ஜனநாயக மதிப்பீடுகளை ஸ்டாலின் தொடர்ந்து நிலைநிறுத்துவார் என்றும், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பல தசாப்தங்களாகவே தி. மு. க. வெறுப்போடு செயல் பட்டுவரும் சில செய்தி ஊடகங்கள், மோசமான குற்றச்சாட்டுக்களை வைத்தாலும், அதைக் கண்டுகொள்ளாமல் இருந்து இதை அவர் செய்வார் என்றும் எதிர்பார்க்கலாம்.

2003இல் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தின்போது என். ராமும் அவரது இந்து குழுமமும் தொடர்ந்து அலைக்கழிக்கப்பட்டது நினைவிலிருக்கலாம். மிகச்சிறிய குற்றச் சாட்டை வைத்தால்கூட முதல்வர் ஜெயலலிதா பல பத்திரிகையாளர்கள்மீது உடனே மானநஷ்ட வழக்குகள் தொடர்ந்தார். நல்ல விமர்சனப்போக்கு இருந்தாலும் அதையும் ஏற்காத அளவுக்கு அவரது கோபம் உச்சத்துக்குப் போனது. அதற்கு அடுத்த வருடம் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்ற பின்பு, நூறுக்கும் மேற்பட்ட வழக்குகளைத் திரும்ப பெற்றுக்கொண்டார். ஆனால், இந்த வழக்குகள் தொடரப்பட்டது குறித்த எந்த மன்னிப்பும் கோரப்படாத நிலையில், அவற்றைத் திரும்பப் பெறுவதற்கான உத்தரவே தன் தயாள மனத்தால் அளித்த ஒரு பரிசு என்று அவர் நினைத்திருக்கலாம்.

2003, 2012, 2018, 2021 - இந்திரா காந்தியின் ‘எமேர்ஜென்ஸி’ காலம் முதல் இப்போதைய பெகாசஸ் வரை, செய்தி ஊடகங்கள் உட்பட அரசுக்கெதிரான எல்லா குரல்களை யும் நசுக்கிய ஆண்டுகள் இவை. இவை மட்டுமல்லாமல், கடந்த காலத்திலும் பல துர்ச்சம்பவங்கள் நடந்திருக்கின்றன, இனிவரும் காலங் களிலும் இவை நடக்கலாம். இதில், தவறு மக்கள் பக்கம் இருக்கிறது - நடப்பதைக் கேள்வி கேட்காமல், கண்டுகொள் ளாமல் ஒரு பார்வையாளர்களாக மட்டுமே அவர்கள் நின்று விடுகிறார்கள்.

40 வருடங்கள் அநுபவம் உள்ள ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில், பிரபலமான முக்கிய செய்திகளை சேகரித்திருக்கிறேன். ஆனால், இன்றுவரை எனக்கு வலி தரும் ஒரு விஷயம் உண்டு. தன் கண்முன்னால் நிற்கிற எழுத்தின் நீண்டகால பாதிப்பு பற்றி வாசகர்கள் கண்டுகொள்ளாமலேயே இருக்கிறார்கள்.

பெரிய ஊழல் ஒன்று தலைப்புச் செய்தியாகும்போது, வாசகர்களின் உணர்வுகளையும் விவாதங்களையும் பார்த்திருக்கிறேன். ”எனக்கு முன்பே தெரியும். எப்படி இவர்கள் இத்தனை ஊழல்வாதிகளாக இருக்கமுடியும்? இவ்வளவு பணத்தையும் வைத்துக்கொண்டு என்ன செய்வார்கள்?” - அவ்வளவுதான். அலுவலக உணவு இடைவேளையின் போதோ இரவு உணவின்போதோ அரசியல் தரம் குறைந்துவிட்டது என்பதை விவாதிப்பார்கள். இந்த வெற்றுப் பேச்சைத் தவிர வேறு ஏதாவது உண்டா என்று கேட்டால், மூன்றாம் உலக பாட்டாளி வர்க்கத்தினரைப் போலவே மூன்று பதில்களைத் தருவார்கள் - “நமக்கேண்டா இந்த வம்பு, சும்மா இரு”, ” ஐயோ, இது ஒரு பெரிய பிரச்னை, நம்மளால ஒண்ணும் செய்ய முடியாது”, ”இது இப்படித்தான் இருந்தது, இப்படித் தான் இருக்கும், நம்மால் மாத்த முடியாது”.

மோசமான அரசையும் தலைவரையும் தூக்கி வீசும் புரட்சியை உருவாக்கி மக்கள் ஆயுதம் ஏந்தவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அரசியல் அமைப்புக்கு உட்பட்டு, இவர்கள் சட்டரீதியாகப் போராடலாம். நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையையும் விரைவான நீதியையும் போராடிப் பெறலாம். நல்ல நிர்வாகம் வேண்டும் என்பதும், வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்பதும் விவாதமாகப் பேசப்படலாம். இது, முதலில் வீடுகளில் நடத்தப்பட்டு, பிறகு பொது வெளிகளில் கூட்டமாக விவாதிக்கப்படலாம். பேரணிகள் நடத்தலாம். நீதிமன்றத்தை அணுகலாம். எல்லாமே அமைதிவழியிலும் சட்டத்துக்கு உட்பட்டும் நடத்தப்படவேண்டும். ஆனால், இதெல்லாம் நடக்க வேண்டுமானால் மக்கள் தங்களது கல்வியை மேம்படுத்திக்கொண்டு, புரிதலை அதிகப்படுத்திக்கொள்ளவேண்டும். மாற்றத்துக்கான உந்துதல் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக மக்களிடையே ஒற்றுமை வேண்டும்.

என் ஈழத்து நண்பர்களுக்கு நான் ஒற்றுமையின் முக்கியத்துவத்தைப்பற்றி சொல்லித் தரவேண்டியதில்லை. சண்டையிடும் பிள்ளைகளுக்கு அப்பா ஒற்றுமை பற்றி சொல்லித்தரும் கதை ஒன்று எல்லாருக்கும் தெரியும். குச்சிகளைக் கொண்டுவந்து ஒரு கட்டாகக் கட்டி, அதை உடைக்கச் சொல்கிறார், அவர்களால் அதை உடைக்க முடியவில்லை. ஆனால், கட்டைப் பிரித்து தனித்தனிக் குச்சிகளாகத் தரும்போது பிள்ளைகள் எளிதாக உடைத்துவிடுகிறார்கள்.

நன்றி. மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்.

# சகலதுறை வீரரான இசுறு உதான சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு!

இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான இசுறு உதான, சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் தலைமை நிர்வாக அதிகாரி ஆஷ்லே டி சில்வா, 33 வயதான இசுரு உதான, சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதற்கான தனது முடிவை நிர்வாகத்திடம் அறிவித்துள்ள தனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இடது கை வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரரான இசுறு உதான, இதுவரை 21 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 18 விக்கெட்டுகளையும் 237 ஓட்டங்களையும் குவித்துள்ளார்.

இதேபோல 34 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ள அவர், 27 விக்கெட்டுகளையும் 256 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.



# ஜேர்மனிய வீரரிடம் வீழ்ந்தார் ஜோகோவிச்



2020 ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியொன்றில் ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரெவ், உலகின் நம்பர் ஒன் வீரரான நோவக் ஜோகோவிச்சை வீழ்த்தினர்.

முதல் செட்டில் வீழ்ச்சியடைந்த போதிலும், ஸ்வெரெவ் அடுத்த செட்களில் தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்தினார்.

இறுதியில் அவர் 1-6, 6-3, 6-1 என்ற செட் கணக்கில் சேர்பிய வீரர் ஜோகோவிச்சை தோற்கடித்தார்.

உலகின் முதல் இடத்தில் உள்ள ஜோகோவிச், ஒரே ஆண்டில் நான்கு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும், ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தையும் வென்ற முதல் வீரராக ஆகுவதற்கான முயற்சியில் இந்த ஆட்டத்தில் களம் கண்டார்.

எனினும் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்லும் ஜோகோவிச்சின் கனவு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆண்களுக்கான ரென்னிஸ் இறுதிப் போட்டி ஆட்டத்தில் ஸ்வெரெவ், ரஷ்ய வீரர் கரேன் கச்சனோவை எதிர்கொள்வார்.

# பென் ஸ்டோக்ஸ் காலவரையற்ற ஓய்வு!



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான பென்ஸ்டோக்ஸ், தற்காலிகமாக அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் காலவரையற்ற ஓய்வை அறிவித்துள்ளார்.

'இந்த மாத ஆரம்பத்தில் கிரிக்கெட்டுக்கு திரும்பியதிலிருந்து முழுமையாக குணமடையாத அவரது மனநலத்துக்கு முன்னுரிமை அளிப்பதற்கும், அவரது இடது ஆள்காட்டி விரல் காயம் குணமடைவதற்கும் இந்த ஓய்வினை எடுத்துள்ளார்' என இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபையின் ஊடக வெளியீடு தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள இந்தியா அணிக்கெதிரான டெஸ்ட் தொடரிலிருந்து விலகியுள்ளார். அவருக்கு பதிலாக கிரேக் ஓவர்டன் டெஸ்ட் அணியில் சேர்க்கப்படுவார்.

அண்மையில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் தொடரில், இங்கிலாந்தின் இரண்டாம் தர ஒருநாள் அணியின் தலைவராக செயற்பட்ட பென்ஸ்டோக்ஸ், புதிதாக ஆரம்பமாகியுள்ள 'த ஹன்ட்ரட்' கிரிக்கெட் தொடரில் நோர்தன் சூப்பர்சார்ஜர்ஸ் அணிக்காக விளையாடினார்.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள விராட் கோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன் முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 4ஆம் திகதி நொட்டிங்காமில் ஆரம்பமாகவுள்ளது.

# ஒலிம்பிக் பதக்க வேட்டையில் ஆதிக்கம் செலுத்தும் சீனா!

2020 ரோக்கியோ ஒலிம்பிக் தொடரின், பதக்கப் பட்டியலில் சீனா தொடர்ந்தும் முன்னிலையில் வகித்து வருகின்றது.

இதன்படி 19 தங்கம், 11 வெள்ளி, 11 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 41 பதக்கங்களை சீனா வென்று முதலிடத்தில் உள்ளது.

இரண்டாம் இடத்திலுள்ள ஜப்பான், 17 தங்கம், 4 வெள்ளி 7 வெண்கலம் அடங்கலாக மொத்தம் 28 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

16 தங்கம், 17 வெள்ளி, 11 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 44 பதக்கங்களை பெற்று அமெரிக்கா மூன்றாவது இடத்தில் உள்ளது.

10 தங்கம், 14 வெள்ளி, 10 வெண்கலம் என அடங்கலாக மொத்தமாக 34 பதக்கங்களுடன் ரஷ்யா நான்காவது இடத்தில் உள்ளது.

10 தங்கம், 3 வெள்ளி, 13 வெண்கலம் என அடங்கலாக மொத்தமாக 26 பதக்கங்களுடன் அவுஸ்ரேலியா ஐந்தாவது இடத்திலும் உள்ளது.

பிரிட்டன், தென்கொரியா, நெதர்லாந்து, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் முறையே ஆறு முதல் பத்து இடங்களை பிடித்துள்ளது.






# இலங்கை அணிக்கு ஜனாதிபதி வாழ்த்து

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது ரி-20 போட்டியில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றிய இலங்கை அணிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி, புதிய உற்சாகத்துடனும் புதிய நம்பிக்கையுடனும் ஒன்றிணைந்து விளையாடி - கிரிக்கெட் உலகில் இலங்கையின் நாமத்தை பாதுகாக்க - மிகுந்த அர்ப்பணிப்புடன் போராடி - இந்திய அணியுடனான போட்டியில் வெற்றி பெற்ற நமது கிரிக்கெட் அணிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# உலக சம்பியனுக்கு கொரோனா

போல்வால்ட் விளையாட்டில் இருமுறை உலக சம்பியன் பட்டம் வென்ற சாம் கென்ட்ரிக்ஸ், கொரோனா பாதிப்பு காரணமாக ரோக்கியோ ஒலிம்பிக்ஸ் போட்டியிலிருந்து வெளியேறியுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த 28 வயது சாம் கென்ட்ரிக்ஸ், போல் வால்ட் விளையாட்டில் நடப்பு உலக சம்பியனாக உள்ளார். 2017 மற்றும் 2019 இல் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் முதலிடம் பெற்றார். 2016 ரியோ ஒலிம்பிக்ஸில் வெண்கலம் வென்றார். இதனால் ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் சாம் கென்ட்ரிக்ஸ் தங்கப் பதக்கத்தை நிச்சயம் வெல்வார் என்கிற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் கொரோனாவால் தற்போது அவர் பாதிக்கப்பட்டுள்ளார்.

சாம் கென்ட்ரிக்ஸுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க மாட்டார் என அதிகார பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ரோக்கியோவில் உள்ள விடுதியில் சாம் கென்ட்ரிக்ஸ் தனிமைப்படுத்தப் பட்டுள்ளார்.

போல் வால்ட் போட்டியின் இறுதிச்சுற்று ஓகஸ்ட் 3 அன்று ரோக்கியோவில் உள்ள ஒலிம்பிக் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(அ)



# ஹிஷாலினிக்கு நீதி கோரி மெழுகுவர்த்தி ஏற்றிப் போராட்டம்!






ஹட்டன், ஆகஸ்ட் 01

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றி வந்த நிலையில் மர்மமான முறையில் உயிரிழந்த 16 வயது சிறுமியான ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி தோட்ட மக்கள் மெழுகுவர்த்தி ஏற்றி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஹட்டன் - டிக்கோயா வீதி, டிக் கோயோ சந்தியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலுக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஹிஷாலினியின் ஆத்மா சாந்தி யடை வேண்டும் என்று பிரார்த்தித்து டிக்கோயா தோட்டத்தில் விசேட பிரார்த்தனைகளும் நேற்று இடம்பெற்றன. (இ)

## கம்பஹா மாவட்டத்தில் தொற்றாளர்கள் உயர்வு

கம்பஹா, ஆகஸ்ட் 01

கம்பஹா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மட்டும் 865 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

மாவட்டத்தில் 15 சுகாதார பிரிவுகளிலேயே தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக மீரிகம பிரிவில் 100 தொற்றாளர்களும், பியகம பிரிவில் 98 தொற்றாளர்களும், களனிப் பிரிவில் 87 தொற்றாளர்களும், வத்தளைப் பிரிவில் 82 தொற்றாளர்களும், ஜா - எல பிரிவில் 79 தொற்றாளர்களும், மஹர பிரிவில் 71 தொற்றாளர்களும், சீதுவ பிரிவில் 62 தொற்றாளர்களும், தொம்பே பிரிவில் 60 தொற்றாளர்களும், கம்பஹா பிரிவில் 54 தொற்றாளர்களும், திவுலப்பிட்டிய பிரிவில் 51 தொற்றாளர்களும், அத்தனகல்ல பிரிவில் 45 தொற்றாளர்களும், ராகம பிரிவில் 30 தொற்றாளர்களும், நீர்கொழும்பு பிரிவில் 15 தொற்றாளர்களும், மினுவாங்கொடைப் பிரிவில் 5 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

குறித்த மாவட்டத்தில் ஆடைத்தொழிற்சாலை கொத்தணி தொற்றாளர்கள் 30 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

392 தொற்றாளர்கள் தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களிலும், 114 பேர் வைத்தியசாலைகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ)

## லொறி விபத்தில் இருவர் படுகாயம்



கொழும்பு, ஆகஸ்ட் 01

இரு லொறிகள் ஒன்றின் பின் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்

தெற்கு அதிவேக வீதி, கெலனிகம பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று தெற்கு அதிவேக போக்குவரத்தப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறியின் மீது அதன் பின்பாக வந்த லொறி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பின்னால் வந்த லொறி மோதியதன் காரணமாக முன்பாகச் சென்ற லொறி குடைசாயந்து பிரதான வீதியில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தால் சுமார் நான்கு மணித்தியாலங்கள் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மிக வேகமாகப் பரவும் கொரோனா; அசமந்தப்போக்கில் ராஜபக்ஷ அரசு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஆகஸ்ட் 01**

**"இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் மிக வேகமாகப் பரவுகின்றது. நாளாந்த மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. ஆனால், ராஜபக்ஷ அரசோ அசமந்தப்போக்கில் செயற்பட்டு வருகின்றது."**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"புதிய கொரோனா வைரஸ் தொற்றுக்களும் நாட்டில் இனங்காணப்பட்டுள்ளன. விசேடமாக இந்தியாவில் பரவிவரும் டெல்டா வைரஸ் தொற்று இலங்கையிலும் இனங்காணப்பட்டுள்ளது. டெல்டா வைரஸ் தொற்று பாரியளவில் பரவிச் செல்லும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது. கொழும்பு நகரிலேயே அதிகளவு பரவியுள்ளது. இந்தியா வைரஸ் தொற்று மிக வேகமாகப் பரவிக்கொண்டு செல்லும் நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரத்தை எடுத்துக்கொண்டால் விசேடமாக ஜூலை மாதம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை 1653 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கொரோனா மரணங்கள் 48 பதிவாகியுள்ளன.

ஜூலை 27ஆம் திகதி 1,688 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதுடன் 48 மரணங்கள் பதிவாகியுள்ளன.

28ஆம் திகதி 1,919 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 63 மரணங்கள் பதிவாகியுள்ளன.

29ஆம் திகதி 2,329 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 65 மரணங்கள் பதிவாகியுள்ளன.

ஜூலை 30ஆம் திகதி 2,455 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 55 மரணங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை அரசால் வெளியிடப்பட்ட தகவல்களே இவை. இந்த ஒருவாரத்தை எடுத்துக்கொண்டால் தொற்றாளர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை எட்டியுள்ளது.

இதேவேளை, நாளொன்றுக்கு 50 பேர் கொரோனாத் தொற்றால் மரணிக்கும் நிலைமை தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 50 என்றால் மாதமொன்றுக்கு 1,500 பேர் கொரோனாத் தொற்றால் மரணிக்கின்றனர் என்று அர்த்தப்படுகின்றது.

கொரோனாத் தடுப்பூசி இரண்டையும் பெற்றுக்கொண்டவர்கள் தொற்றுக்கு உள்ளாகும் நிலை அதிகரித்துள்ளது.

சுகாதாரத்துறையிலுள்ள அநேகமானவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்கள் அனைவரும் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களாவர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு கொரோனாத் தடுப்பூசி மட்டும் போதுமானதில்லை. கொரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்துவதால் மட்டும் கொரோனா வைரஸ் பரவலிலிருந்து மீள முடியாது. சுகாதார நிபந்தனைகளையும் பின்பற்றுமாறு ஐக்கிய நாடுகள் சபையின் சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது" - என்றார். (இ)

## மூன்றரை வயது சிறுவன் கொரோனாவால் மரணம்

கொழும்பு, ஓக. 01

மஸ்கெலியா சுகாதார அத்தியட்சகர் பிரிவில் மூன்றரை வயது சிறுவன் ஒருவன் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

ஸ்டீபன் அபிஷேக் என்ற சிறுவனே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

கடந்த 29ஆம் திகதி இவர் சுகவீனமுற்ற நிலையில் மஸ்கெலியா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அங்கு சிகிச்சை அளிக்கும் போது சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

## ஹந்தான காட்டுப் பகுதியில் சிறுத்தையின் உடலம் மீட்பு



கண்டி, ஆகஸ்ட் 01

கண்டி - ஹந்தான காட்டுப் பகுதியில் வெடி வைத்து சிறுத்தை ஒன்று கொல்லப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. காயங்களுடன் சிறுத்தை ஒன்றின் உடலம் கிடக்கின் றது எனப் பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமை வாக குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் சிறுத்தை யின் உடலத்தை மீட்டுள்ளனர்.

சிறுத்தையின் உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப் படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## சகல அரச...

கொழும்பில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

சகல அரச உத்தியோகத்தர்களும் திங்கட்கிழமை முதல் பணிக்கு சமுகமளிக்க வேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்துள்ளார்.

அதற்கமைய இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சகல சுற்றறிக்கைகளும் இரத்துச் செய்யப்பட்டு புதிய சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திடீரென இவ்வாறான சுற்றறிக்கை வெளியிடப்படுவதற்கான காரணம் என்ன? கொவிட் நிலைமை தீவிரமடைந்த காலப்பகுதியிலேயே இந்த குறித்த சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன.

அவ்வாறெனில் தற்போது கொவிட் நிலைமை சீராகியுள்ளதா? நிலைமை சரியாகாமல் எதற்காக சகல அரச ஊழியர்களும் சேவைக்கு அழைக்கப்படுகின்றனர்? இதனால் அரச ஊழியர்கள் கொத்தணி உருவாகினால் அதற்கு பி.பி.ஜயசுந்தர பொறுப்பு கூறுவாரா?

தற்போது நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது.

இவ்வாறான நிலையில் சுகாதார ஊழியர்களும் தொற்றுக்கு உள்ளாகும் வீதம் அதிகரித்துள்ளது.

பேராதனை வைத்தியசாலையில் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டிருந்த 37 ஊழியர்களுக்கு ஒரே நாளில் கோவிட் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. கண்டி, கராப்பிட்டிய தேசிய வைத்தியசாலை உள்ளிட்டவற்றில் பாரதூரமான வகையில் கொவிட் வைரஸ் பரவியுள்ளது.

எனவே வெளியிடப்படவுள்ள புதிய சுற்றறிக்கையை சுகாதார ஊழியர்களையும் உள்ளடக்கி நடைமுறைப்படுத்த முயற்சிக்கவேண்டாம். நூறுவீதம் பணிக்கு சமுகமளிக்காவிட்டாலும் வழமையான கடமைகள் இடம்பெற்றன.

எனவே புதிய சுற்றறிக்கையை சுகாதார ஊழியர்களுக்கும் நடைமுறைப்படுத்த எத்தனித்தால் சகல சுகாதார ஊழியர்களையும் ஒன்றிணைந்து நிச்சயம் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்போம்-என்றார்.

## சரத் வீரசேகரவின்...

ராஜபக்ஷவினால் கடந்த 27 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இவ்வாறு இரு துறைகள் அமைச்சர் சரத் வீரசேகரவின் அமைச்சிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ள குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய இதுவரை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் காணப்பட்ட சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பல்நோக்கு மேம்பாட்டுச் செயலணி ஆகியவை பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய சரத் வீரசேகர இலங்கை பொலிஸ் மற்றும் தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றுக்கு பொறுப்பான அமைச்சராக மாத்திரமே செயற்படுவார்.

## தடுப்பூசி...

பில் போக்குவரத்து அமைச்சருக்கும் ஜனாதிபதிக்கும் எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளோம்.

இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் மாகாணங்களுக்கு இடையேயான பொதுப் போக்குவரத்து சேவைகளை முன்னெடுப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ள நிலையில், தனியார் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படும்.

எனினும், பஸ் நுழைவாயிலில் தடுப்பூசி அட்டையின் பிரதிகளைக் காண்பிக்கத் தவறும் பணிகளுக்கு தனி ஆசனம் வழங்கப்படுவதோடு, இரண்டு மடங்கு கட்டணம் அறவிடப்படும்.

சொகுசு பஸ்களில் பயணிப்பவர்களுக்கும் தடுப்பூசி அட்டையின் பிரதி கண்டிப்பானது. எனினும், தடுப்பூசி அட்டை இல்லாதவர் தனி இருக்கையில் பயணம் செய்யும் அதேவேளை, பயணக் கட்டணத்தின் ஒன்றரைப் பகுதியை அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே அதிவேக நெடுஞ்சாலையின் போக்குவரத்துகளும் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. (இ)

## புலிகளின்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் பதிக்கப்பட்ட ஒரு ஜோடி காலணிகளின் வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவியமை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

வீடியோவில் சித்தரிக்கப்பட்ட காலணிகள் நைக் நிறுவனத்தால் தயாரிக்கப்படவில்லை என்பது விசாரணையின் போது அந்நிறுவனத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

புலமைச் சொத்துக்களின் துஷ்பிரயோகம் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, நிறுவனத்தின் நடைமுறைக்கு ஏற்ப பொருத்தமான அமுலாக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என அந்நிறுவனம் மேலும் அறிவித்துள்ளது.

## 2404 கர்ப்பிணி...

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இதனைத் தெரிவித்தார்.

அதேநேரம், இதுவரை 14 கர்ப்பிணித் தாய்மார்கள் கொரோனா தொற்றினால் உயிரிழந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்கள் அனைவரும் மூன்றாம் கோவிட் 19 அலையினாலேயே மரணித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் பலருக்கு அதி உயர் குருதி அழுத்தம், நீரிழிவு உள்ளிட்ட நோய்கள் காணப்பட்டன.

அத்துடன், 35 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித்தாய்மார்களே கோவிட் 19 நோயினால் உயிரிழந்ததாகவும் குடும்ப நல சுகாதார பணியகத்தின் சித்ரமாலி டி சில்வா குறிப்பிட்டார்.

## நேற்றும் 2000...

ணிக்கை 3 இலட்சத்து 8 ஆயிரத்து 812 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,906 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 77 ஆயிரத்து 118 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## வவுனியாவில்...

டறியப்பட்டது.

சிறுமி உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்துள்ளார்.

சம்பவத்தில் ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்த நிசாந்தி என்ற 7 வயது சிறுமியே மரணமடைந்துள்ளார்.

இது தொடர்பில் கனகராயன்குளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

## மன்னார்...

வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் தாழ்வுப்பாடு கிராமத்தில் கடலுணவுத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்கள் அதிகளவில் உள்ளதால் அங்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 35 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.


இந்த நிலையில் மன்னார் 70 கிராம அலுவலர் பிரிவு கிராமத்தை தனிமைப்படுத்த கோரிக்கை மாவட்டச் செயலாளர் ஊடாக கோவிட்-19 தடுப்புச் செயலணிக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் வீரியமடையும் டெல்டா!

### விசேட வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

**கொழும்பு, ஒக். 01**

**நாட்டில் தற்போது அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களில் 15 வீதமானோர் டெல்டா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியவர்கள் எனவும், விரைவாக வைரஸ் தொற்று பரவுகின்றதைத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன எனவும் விசேட வைத்திய நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.**



வெறுமனே தடுப்பூசியை ஏற்றிக் கொள்வதால் அச்சுறுத்தலில் இருந்து விடுபட முடியாது எனவும், முறையான சுகாதாரப் பாதுகாப்புக் கட்டமைப்பை உருவாக்கிய பின்னரே நாட்டைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் தற்போதும் டெல்டா வைரஸ் வேகமாக பரவிக் கொண்டுள்ளது. அதனைக் கருத்தில்கொண்டு சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றியாக வேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் முன்னாள் ஆலோசகரும் தொற்று நோயியல் நிபுணருமான விசேட வைத்தியர் நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சுகாதாரப் பிரிவினரிடையே கொரோனாத் தொற்று அதிகரித்து வருகின்றது என கொழும்பு டெய்லி மிரர் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

அத்தோடு, தடுப்பூசி இரண்டு டோஸ்களை ஏற்றிக்கொண்டுள்ள வைத்தியர்கள், முன்களப் பணியாளர் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு இடையே கொரோனாக் கொத்தணி உருவாகி வருகின்றது எனவும் குறித்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இது சுகாதாரத்துறையில் ஆள் பற்றாக்குறைக்கு வழி வகுக்கும் எனவும் மூத்த சுகாதார அதிகாரிகளை மேற்கோள்காட்டி டெய்லி மிரர் தெரிவித்துள்ளது.

இதேவேளை, "தடுப்பூசி மட்டுமே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் தீர்வு இல்லை. பாரதூரமான நிலைமையிலேயே இப்போதும் கொரோனாத் தரவுகள் உள்ளன என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே வலியுறுத்தியுள்ளார்.

இத்தோடு ஒட்சிசன், கட்டில்களின் தட்டுப்பாடும் அதிகரித்து வருகின்றது. நாம் இப்போது பலவீனமான தீர்மானங்களை எடுத்தால் பின்னர் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இது எவருக்கும் விளங்குவதில்லை. நாடு அச்சுறுத்தலான நிலையில் உள்ளது. முதலில் நிலைமைகளைக் கட்டுப்படுத்த நிலையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து பின்னர் நாட்டைத் திறக்க வேண்டும் எனவும் வைத்தியர் பிரசாத் கொலம்பகே சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

# 11 வயது சிறுமி வன்புணர்வு; தாத்தாவுக்கு விளக்கமறியல்

கம்பஹா, ஒக. 01

கம்பஹா மாவட்டத்தில் வசித்து வரும் 11 வயது சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாத்தா விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விசேட பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய கைதுசெய்யப்பட்ட குறித்த நபர் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுமி அவரது தாய், தந்தை மற்றும் 5 வயது தங்கையுடன் வாழ்ந்து வந்திருந்தார். எனினும், பெற்றோர் வேலைக்குச் செல்லும் சந்தர்ப்பத்தில் சிறுமியின் பாட்டி அவர்களது வீட்டுக்குப் பாதுகாப்புக்காக வருவார்.

கடந்த 15 ஆம் திகதி சிறுமியின் பெரியம்மாவுக்குச் சுகயீனம் ஏற்பட்ட காரணத்தால் பாட்டி வெளியில் சென்ற சந்தர்ப்பத்தில் தாத்தாவைப் பாதுகாப்புக்காக விட்டுச் சென்றுள்ளார்.

இதன்போது குறித்த சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இது குறித்து சிறுமி தனது தாய்க்குக் கடிதம் ஒன்றை எழுதி இது தொடர்பில் அறிவித்துள்ளார்.

பின்னர் சிறுமியின் தாய் அவரது தந்தையிடம் இது தொடர்பில் விசாரித்த சந்தர்ப்பத்தில் அவர் தவறை ஒப்புக்கொண்டுள்ளார்.

இதையடுத்து 62 வயதுடைய குறித்த சிறுமியின் தாத்தா கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

## ஊர்காவற்றுறை...

பிரதேச செயலகத்தின் சமுர்த்தி வங்கியில் பணியாற்றிய பெண் ஊழியரே தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இதனை அடுத்து அவருடன் நெருக்கமாக பழகியவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் சுகாதாரத் தரப்புக்கள் தெரிவித்தன.

## அதிபர், ஆசிர...

அஸ்டராசெனிக்கா தடுப்பூசிகளுடன் ஜப்பானில் இருந்து புறப்பட்ட விமானம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று வந்தடைந்தது. (இ)

## கொரோனா...

துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 61 பேரில் 25 பெண்களும், 36 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

## ஏ – 9 வீதி விரைவில் புனரமைப்பு



யாழ்ப்பாணம், ஓக. 01

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலை ஏ - 9 வீதி பல மில்லியன் ரூபா செலவில் மீள்புனரமைப்பு செய்யப் படவுள்ளது.

இதற்கான வேலைகள் பகுதிபகுதியாக இடம்பெற வுள்ளன.

நெடுஞ்சாலைகள் அமைச்சு இதற்கான துரித நட வடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் தேசிய ரீதியான கேள்விக் கோரிக்கை களையும் முன்வைத்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை நிதிப் பங் களிப்பில் யாழ். - கண்டி வீதி புனரமைப்பு பணி விரைவில் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ - 05)

### அமைச்சரவைப் பத்திரம் மூலம்

# உரிய தீர்வு கிடைக்காவிடின் புதிய வடிவத்தில் போராட்டம்

### அரசுக்கு ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 01

**நாளை திங்கட்கிழமை அமைச்சரவைப் பத்திரம் மூலம் ஆசிரியர்களின் பிரச் னைகளுக்குத் தீர்வு கிடைக்காவிடின் போராட்டம் புதிய வடிவில் தொடரும் என்று இலங்கை ஆசிரி யர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரி வித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது:-

“அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு உள்ளிட்ட கோரிக்கை களுக்குத் தீர்வு கோரி ஆரம்பித்த போராட்டம், 20 நாட்களாகத் தொடர்கின்றன.

எமது போராட்டம் தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ளது. திங் கட்கிழமை (நாளை) அமைச்சர வைப் பத்திரம் தயாரிக்கப்படும் என்று நம்புகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள் திருப்திப் படும் வகையிலான தீர்வு வழங்கப் படவில்லை எனின் அடுத்த வாரம் புதிய வடிவிலான போராட்டங்கள் தொடரும்” - என்றார்.

இலங்கையின் பல்வேறு பகுதி களில் நேற்றும் ஆசிரியர் சங்கங் களின் பிரதிநிதிகள் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர். (இ)

# அதிபர், ஆசிரியர்களின் பிரச்னைக்கு தீர்வின்மையால் மாணவர்கள் பாதிப்பு

### திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. கவலை




கொழும்பு, ஓக. 01

அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை காரணமாக இரண்டு வாரங் களுக்கும் மேலாக கல்விச் செயற்பாடுகள் குழம்பியுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளு மன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலா ளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”கொரோனா வைரஸ் பரவல் காரணமாக முடங்கிப்போயிருந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் தாமாக முன்வந்து நிகழ் தகை கற்றல் நடவடிக்கையில் ஈடுபட் டனர்.

அந்தக் கற்றல் முறைமை நூற்றுக்கு நூறுவீதம் வெற்றியளிக்காத போதிலும் கற்பித்தல் செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்பட்டன.

எனினும், சம்பளக் கோரிக்கையை முன்வைத்து நிகழ்தகை கற்பித்தல் செயற்பாட்டிலிருந்து ஆசிரியர்கள் விலகியுள்ளதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் முற்றாகப் பாதிக்கப்பட் டுள்ளன.

கொரோனா வைரஸ் பரவலினால் நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட ஏனைய துறைகளும் வீழ்ச்சியடைவதைப் போன்று கல்வித் துறையும் வீழ்ச்சிய டைவதற்கு இடமளிக்க முடியாது.

ஏனைய நாடுகளில் நிகழ்தகை கற்றல் செயற்பாடுகள், தொலைக் கல்வி என்பன மிகவும் வேகமான முறையில் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் அதற்குப் பழக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறானக் கற்றலில் ஈடுபடுவதற்கு நமது நாட்டில் பல்வேறுப் பிரச்னைகள் காணப்படுகின்றன. தொழில்நுட்பம், தரவு, உபகரணங்கள் இன்மை என பல பிரச்னைகள் காணப்படுகின்றன. இவ் வாறான நிலைமையிலும்கூட நிகழ்தகை கற்பித்தல் செயற்பாடு முன்னெடுக்கப் பட்டு வந்த நிலையில் அதற்கும் பாதிப்பை ஏற்படுத்துவது சிறந்த விடய மல்ல.

இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசு ஏன் முன்வரவில்லை? இது நீண்ட காலப் பிரச்னையாக இருந்தாலும்கூட முன்னிலையில் இருந்து இதற்கு தீர்வொன்றை முன்வைப்பது அரசின் பொறுப்பாகும்.

ஒரே தடவையில் நூற்றுக்கு நூறு சதவீதம் பிரச்னைக்கு தீர்வை பெற் றுக்கொடுக்க முடியாது. எனினும், நம்பிக்கைக்குரிய உறுதிமொழிகளை வழங்கலாம்.

விசேடமாக இந்தக் கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் இப்பிரச் னைக்கு ஒரு நாளில் அல்லது இரண்டு மாதங்களில் தீர்வை பெற்றுக்கொடுக்க முடியாவிட்டாலும்கூட நாம் இவ்வா றான வழியில் இப்பிரச்னைக்குத் தீர்வைப் பெற்றுத்தருகின்றோம் என்றும் அரசு ஓர் உறுதிமொழியை வழங்குவது அவசியம்.

எனவே, அவ்வாறான உறுதிமொழி களை வழங்குவதற்குக்கூட அரசு முன்வர வில்லை என்பதே எமது ஆதங்கம்” - என் றார். (இ)

# இணையவழி கற்பித்தலை ஆரம்பிக்குமாறு ஆசிரியர்களிடம் பேராயர்கள் வேண்டுகோள்

கொழும்பு, ஓக. 01

இலங்கை ஆசிரியர்கள் இணையவழி கற்பித்தலை மீண்டும் ஆரம்பிக்க வேண் டும் என்று கத்தோலிக்க பேராயர்கள் மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கத்தோலிக்க பேராயர்கள் மன்றம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையி லேயே மேற்கண்டவாறு கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளது.

சம்பள முரண்பாடு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, இலங்கை ஆசிரியர் சங்கங்கள் இணையவழி கற்பித் தலில் இருந்து ஒதுங்கிக்கொண்டுள்ளனர்.

நாட்டின் எதிர்காலத்தைக் கையா ளும் திறமையான மாணவர்களை உரு வாக்கும் பொறுப்பை ஆசிரியர்கள் சிந் தித்து, கற்பித்தலை முன்னெடுக்க வேண் டும் என்றும் கத்தோலிக்க பேராயர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ள னர்.

குழந்தைகளை நாட்டுக்குப் பயனுள்ள குடிமக்களாக வடிவமைப்பதில் ஆசிரியர் கள் பிரதான பங்கு வகிக்கின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ)

# மட்டு. கடலில் முரல் மீன்பிடிக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



மட்டக்களப்பு, ஓக. 01

மட்டக்களப்பு மாவட்ட கடற்றொ ழிலாளர்கள் முரல் மீன்பிடியில் ஈடுபடு வதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண் டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முரல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு விதிக்கப்பட் டிருந்த தடை காரணமாக, குறித்த தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட ஆயிரக்கணக்கான கடற்றொழிலாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.

குறித்த விடயம் தொடர்பாக, கடற் றொழில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதையடுத்து சம்பந்தப்பட்ட அதி காரிகளுடன் கலந்துரையாடிய அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா, “நாட்டில் பல்வேறு பொருளாதார சவால்கள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலை யில் மேலும் பாதிப்புக்களை உருவாக் கும் வகையில் மீன்பிடித் தடைகள் அமையக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, முரல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை மட்டக் களப்பு கடற்றொழிலாளர்களுக்கு வழங் குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது” - என்று தெரிவித்தார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை



**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-மலைக்கோட்டை
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்

**இரவு**

7.00 மணி : SPOTLIGHT தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்-ஞா.ஸ்ரீநேசன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம்
10.00 மணி:-நேர்கொண்ட பார்வை -இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின்




**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு